## Our Philosophy
**எங்கள் தத்துவம்**

## At East Metro Youth Services
**கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகத்தில்,**

- நம் சமூகத்தின் இளைஞரின் மேலான நலன் தான் முதன்மை முக்கியத்துவம் பெறுகிறது
- இளைஞரும் அவரது குடும்பத்தாரும் கண்ணியமாகவும் மதிப்புடனும் நடத்தப் படுகிறார்கள்
- இளைஞரின் மற்றும் அவரது குடும்பதத்தாரின் ஆற்றல்களும் வேற்றுத் தன்மையும் அறிந்தேற்று மதிப்புறப்படுகின்றன
- தேவைக்கிணக்கமாக சேவைகள் அளிப்பதற்குத் திறவுகோலாவது, நெகிழ்வுத் தன்மை, புதியமுறை செயலாற்றம், தனிப்பட்டோற்கேற்ப வடிவமைத்தல் ஆகிய அணுகுமுறைகளாகும்
- செயலூக்கமும் திறன்பாடும் அமைந்த பலன்களை இளைஞருக்கு அளிப்பதை விளக்கமாகக் காட்டும் கூட்டுமுறையாற்றலை ஊக்குவித்தல்
- ஒருமுகநோக்கமும், தொழில்முறைத் திறனும், பொறுப்பேற்புத் தன்மையும் வாய்ந்த தலைமையினால் சிறப்பும் உயர்தரமும் உள்ள பேணுதல் சாதிக்கப் படுகிறது
- குடும்பத்திற்கு ஆதாரம் செய்யும் சேவைகள் தன்னிச்சையானது; மற்றும்

மிகக் குறைவானக் கட்டுப்பாடும் நிலைகுலைவும் அமைந்த வழியே எப்பொழுதும் மேற்கொள்ளப் படுகிறது.

## Access, Equity and Anti-Racism at East Metro Youth Services
## கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகத்தில் நுழைவுரிமை, சமநீதி நிறைவு, இனபேதம் தவிர்த்தல்

கிழக்கு டொரோன்டோ பல்வேறு மக்கள் சமுதாய வேறுபாடுடையவரும் சமநீதி நிறைமுறை தேடும் குழுக்களையும் கொண்டமைந்தது என்பதை கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகம் அறிந்துணருகிறது. அவற்றில் உட்பட்டவர்; ஊனமுற்றோர், வேற்றுப் பண்பாடும் இனமும் சார்ந்த சிறுபான்மையோர், வேற்றுநாட்டுக் குடிபுகுந்தோரும் புகலிடம் கோருபவரும், சமுதாய-பொருள் சார்ந்து பாதிப்பு நிலையில் உள்ளோர், தொன்முதிய குடிமக்கள், ஒருபாலினச் சேர்க்கை கொள்ளும் பெண்களும் ஆண்களும், இருபாலின சேற்க்கைக் கொள்வோர், அரவாணைகள், முதலியோர். கிழக்கு டொரோன்டோவில் குடியுள்ள எல்லோருக்கும் நுழைவுரிமைத் தடைகளைக் குறைத்து, அவர்களை எங்கள் சேவைகளில் முழுமையாகக் கலந்து கொண்டு பலனடைய வேண்டுமென்று ஊக்குவிப்பதே எங்கள் குறிக்கோள்களில் ஒன்று.

நுழைவுரிமை, சமநீதி நிறைவு, இனபேதம் தவிர்த்தல் கொள்கைக்கு EMYS பொறுப்பேற்புக் கொண்டுள்ளது. பரிமாற்றமாக மதிப்புக் கொடுக்கும் சூழலை இந்த முகவையில் வளர்க்க நாங்கள் முனைகிறோம். தனி மனிதர் ஒவ்வொருவருக்கும் வாழவும், பணியாற்றவும், தொல்லையும் பாகுபாடும் இல்லாத சூழலில் சேவைகள் பெறவும் உரிமை உண்டு என்பது எங்கள் நம்பிக்கை.

தன் எல்லா செயல்பாடுகளிலும் நுழைவுரிமை, சமநீதி நிறைவு, இனபேதம் தவிர்த்தல், ஆகிய கொள்கைகளை ஒருங்கிணைக்கும் குறிக்கோள்களுக்கு EMYS கடமைப்பட்டுள்ளது, பின்வருவன உட்பட;

### சேவைகளுக்கு நுழைவுரிமை

நுழைவுரிமை, சமநீதி நிறைவு, இனபேதம் தவிர்த்தல், ஆகிய கொள்கைகளை வளரச்செய்ய EMYS சேவைகளின் ஒவ்வொரு பகுதியையும் தேர்வு செய்து மாற்றங்கள் உண்டாக்குவோம்.இதில் உள்ளடங்கியது, எங்கள் எட்டுத்தொடர்பு மற்றும் தகவல் அளிப்புத் திட்டங்களும், அத்துடன் எங்கள் உள்ளேற்றம், குறித்தனுப்புகை, தேவைஅளவை நடைமுறைகளும். மேலும், திட்டம் செயல்படுத்துதல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு முதலியன சீராய்வுக்குட்படும்.

### விருப்பேற்புக்கு நுழைவுரிமை

தாம் அடையும் சேவைகளைச் சார்ந்து முடிவுகள் எடுப்பதில் பங்கு கொள்ள எங்கள் வாடிக்கையாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

### செய்தி, தகவல் அளிப்புக்கு நுழைவுரிமை

உங்கள் மொழியை நாங்கள் பேசுகிறோம். கன்டோனீஸ், மன்டாரின், சிசுவான், யூதமொழி, ஃப்ரென்சு, க்ரேக்கம், மாசிடோனியன், குஜராதி, மலையாளம், தமிழ், ஹிந்தி, கன்னடம், பஞ்சாபி, உருது, வங்காளம், அராபிக், ஃபார்ஸி, டாரி, இத்தாலியன், போர்துகியம், ருஷ்யன், ஜூலு, ஆகிய மொழிகளைப் பேசுவோரை EMYS பணியில் அமைத்துள்ளது.

### ஆளுகைமுறைக்கு நுழைவுரிமை

எங்கள் ஆளுநர் குழுமம் ஓர் உள்ளடக்கும் குழுமமாகும். அவர்கள் சேவை புரியும் மற்றும் சார்பு செய்யும் மக்களின் வேறுபாடுற்ற பின்னணியை எப்பொழுதும் மனதில் கொண்டுள்ளனர். அவர்களின் ஆட்சி மற்றும் பொருள்திட்டங்களுக்கெல்லாம் அடிப்படையாக இருப்பது அவர்க்ளுடைய பரந்த அளவானப் பிரதிநிதித்துவம் தான்.

**பணியமர்த்தல் நுழைவுரிமை**

பொறுப்பணக் குழுமத்தினருக்கும், பணியாளருக்கும், தொண்டருக்கும், அவர்களுடைய பரிமாற்றப்பழக்கத் திறன்களை மேம்பாடு செய்யவும், வேறுபாடுற்ற மக்கள் சமூகங்க்களைப் பற்றிய அறிவுணர்ச்சியைப் பெருகச்செய்யவும், நாங்கள் கல்வியும் பயிற்சியும் அளிக்கிறோம்.

**பயிற்ச்சிக்கும் கல்விக்கும் நுழைவுரிமை**

பரிமாற்றப் பழக்கத் திறன்களை மேம்பாடு செய்யவும், வேறுபாடுற்ற சமூகத்தினரைப் பற்றிய அறிவுணர்ச்சியைக் கூட்டுவதற்கும், சேவைகள் அளிப்பதில் ஈடுபட்டுள்ள எங்கள் மன்றக்குழுவினருக்கும், பணியாளருக்கும், மற்றும் தொண்டருக்கும் நாங்கள் கல்வியும் பயிற்சியும் அளிக்கிறோம்.

## Privacy and Confidentiality at EMYS
## EMYS–இல் தனிமறைவு நிலையும் நம்பகத்தன்மையும்

ஒன்டேரியோகுழந்தை மனநல முகமையாலும் சட்டப்படியும் நிறுவப்பட்ட முறைப்படி ஏற்கப்படுவதற்கான தரப்பாடுகளுக்கு ஒப்ப உங்கள் மறைப்புநிலையை பாதுகாக்கும் பொறுப்பேற்றுள்ளது கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகம். எங்கள் மறைப்புநிலைக் கொள்கையை செயலுறுத்தும் பொறுப்பு எங்கள் மனிதவளப் பணித்துறையில் உள்ள ஓர் ஆட்சியாளருடையது. அந்தக் கொள்கையின் தேவைகளையும் செயல்முறைகளையும் எங்கள் எல்லா EMYS பணியாளரும் நங்கு அறிவார்.

## Identifying Purposes and Obtaining Consent
## குறிக்கோள்களைக் கண்டுணருதலும் இசைவு பெறுதலும்

EMYS-இல் தனிப்பட்டத் தகவல் மிகப்பொறுப்புடன் பேணப்படுகிறது. எப்படி நாங்கள் திரட்டும் விவரக்குறிப்புகளை பயன்படுத்துகிறோம் என்பதை எங்கள் வாடிக்கையாளருக்குத் தெரிவிப்பதுடன், அவரது வெளிப்படையான அனுமதியோ இசைவோ இல்லாமல் அதை வேறு எந்த பொருட்டுக்கும் பயன்படுத்த மாட்டோம். அந்த இசைவை எந்த நேரத்திலும் பின்பெறலாம்.

## Limiting Use, Disclosure, and Retention
## வரம்புக்குள் பயன்படுத்தல், வெளிப்படுத்துதல் மற்றும் வைத்திருத்தல்

தனியொருவரின் உடன்பாடு அல்லது சட்டத்தின் தேவைப்படியன்றி, அவரைப் பற்றிய தனிப்பட்டத் தகவல் அவரிடம் குறிப்பிட்டு சொன்னதல்லால் வேறு எந்த நோக்கங்கள் கொண்டும் பயன்படுத்தப்படாது, வெளியிடப்படாது. தனிப்பட்டத் தகவல் தேவைக்கு மேல் வைத்திருக்கப்படாது.

## Accuracy
## திட்பநுட்பம்

சிகிச்சையை சார்ந்து மிகச்சிறந்த முடிவுகள் எடுக்கும்பொருட்டு, EMYS தன்னிடமுள்ளத் தகவலும், திட்பநுட்பமும், முழுமையும், நாளது தேதி வரையும் ஆனது எனபதை உறுதிப்படுத்த முனைகிறது.

## Safeguards
## பாதுகாப்பு முறைகள்

தனிப்பட்டத் தகவலை EMYS கீழ்கண்டனவற்றிலிருந்து பாதுகாக்கிறது;

- இழப்பு அல்லது களவு
- அதிகாரம் பெறாத நுழைவுரிமை, பயன்படுத்தல், அல்லது வெளியிடல்
- பதிப்பெடுத்தல்
- மாற்றியமைத்தல்

தகவலின் நுண்ணியப் பாதிக்கும் தன்மைக்கு ஒப்பக் காப்புறுதியின் நிலை அமையும்படி நாங்கள் உறுதிப்படுத்துவோம்.

## Openness
## வெளிப்படை நிலை

எங்கள் தனிமறைவுரிமைக் கொள்கை எல்லோருக்கும் உடனடியாகக் கிடைக்கும்படி அமைந்துள்ளது.

## Individual Access
**தனிப்பட்டோர் நுழைவுரிமை**

தம்மைப் பற்றி என்ன தனிப்பட்டத் தகவல் திரட்டப்பட்டுள்ளது, அது எப்படிப் பயன்படுத்தப் ப டுகிறது, யாரிடம் வெளியிடப்பட்டுள்ளது, என்பதையெல்லாம் தனிப்பட்டோர் அறிவதை உறுதிப் படுத்த EMYS முனைகிறது. அதன் திட்பநுட்பத்தையும் முழ்ஹுமை நிலையையும் எவ்வாறு ஒப்பாய்வது என்பதையும், தேவைப்பட்டால் அதை எப்படி திருத்துவது என்பதையும் எங்கள் வாடிக்கையாளருக்கு நாங்கள் தெரிவிக்கலாம்.

## Challenging Compliance
**இணக்கம் குறித்து விளக்கக் கோரிக்கை**

EMYS தம் மறைவுரிமைக் கொள்கையைக் கடைபிடிக்கவில்லை என்று நீங்கள் நினைத்தால், இந்த விவகாரத்தை மனிதவள ஆட்சியாளரிடம் அல்லது மறைவுரிமைத் தகவல் ஆட்சி அலுவலரிடம் ஒரு எளிதான குறையீட்டு முறையில் கொண்டு செல்லலாம்.

## Confidentiality
**நம்பிக்கை**

எங்கள் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று வாடிக்கையாளர் தகவல்களை மந்தணமாக வைத்திருப்பது. இந்த முகமையுடன் தொடர்பு கொள்வதற்குமுன் எல்லா EMYS பணியாளரும், மாணவர்களும், தொண்டர்களும் ஒரு நம்பிக்கை உறுதியளிப்பில் கையொப்பமிட்டு, அதை நிலைநிறுத்துவார் என்று எதிர்பார்க்கபடுகிறது.

## General Principles Governing Confidentiality
**நம்பிக்கைத் தன்மையை முறைப்படுத்தும் பொதுநிலைக் கோட்பாடுகள்**

பாதுகாப்பான நம்பகமுள்ள சூழலில் தான் நல்விளைவளிக்கும் சீர்நல செயல்பாடுகள் எய்துபெற முடியும்.

தமக்கு,பிறருக்கு அல்லது உடைமைகளுக்கு உடனடி ஆபத்து விளையக்கூடிய தருணங்களில் – அவற்றை சிகிச்சை செய்யும் சூழலில் கையாள முடியாத நிலையில் – தனிப்பட்டோருக்கும் சமூகத்திற்கும் நம் கடமையின் காரணமாக நாம் நம்பகத்தன்மையை முறிக்க வேண்டி வரும், ஆனால் உயிர் அல்லது உடைமையைப் பாதுகாப்பதற்குத் தேவையான அளவில் மட்டுமே.

ஒரு இளஞர் தாம் தவறாக நடத்தப்படுவதாகவோ அல்லது வேறு முறைகளில் தமக்குப் பாதுகாப்பு தேவையென்றுக் குறிப்பிட்டாலோ, குழந்தை மற்றும் குடும்ப சேவைகள் சட்டத்திற்குட்பட்டுள்ள EMYS பணியாளர், மாணவர், மற்றும் தொண்டர்கள் அதை பொறுத்தமான அதிகாரிகளிடம் அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

தாம் அளித்துள்ள சேவைகளைச் சார்ந்த பதிவுக் குறிப்புகளை சட்டப்படி EMYS அமைக்க வேண்டும். இந்த முகமையின் மந்தணமான உடைமைகள் இந்தப் பதிவுகள்.

பதிவுகளையும் மற்ற ஆவணங்களையும் பாதுகாப்பாக சேமிப்பு செய்து, தேவை கழிந்த பின் வாடிக்கையாளரின் பெயர் அல்லது அடையாளங்காட்டும் வேறு எந்தப் பொருள்களையும் கிழிசல்

செய்து வாடிக்கையாளரின் தனிமறைவுரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்று பணியாளர்கள் எதிர்பார்க்கப் படுகிறார்கள்.

அவரது பதவியின் தன்மையினால் அறியத் தேவையானவருடன் மட்டுமேவாடிக்கையாளரைச் சார்ந்த தகவல் கலந்துரையாடப்பட வேண்டும். ஒருபொழுதும் அது தற்செயல் உரையாடலின் பொருட்பாடாக இருக்கக் கூடாது. நம்பகத் தன்மை எவ்விதமாகவும் முறிக்கப்படுதல், அல்லது அதிகாரம் அளிக்கப்படாது பதிவேடுகளுக்கு நுழைவுரிமையெடுத்தல், ஆனவை கடுமையாக நடத்தப்பட்டு ஒழுங்குமுறை நடவடிக்கை எடுக்கப்படும்.

## Issues or Concerns
## வாதவிவகாரங்கள் அல்லது விசாரங்கள்

முடியுமளவுக்கு மிகச் சிறந்த சேவைகளை அளிப்பதற்கு கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவைகளைச் சார்ந்த நாங்கள் பொறுப்பெடுத்துள்ளோம். உங்கள் எண்ணங்களும் செயல் குறிப்புரைகளும் – குறையீடு எதுவும் இருந்தாலும் – எங்களுக்கு முக்கியமானவை. எங்கள் செயல்தன்மையைப் பற்றி எந்நேரத்திலும் உங்கள் கருத்துரைத் தெரிவிக்க ஊக்குவிக்கப்ப டுகிறீர்கள். அதை எழுத்து வழியாக அல்லது உங்கள் பணியாளரிடம் பேசித் தெரிவிக்கலாம். தயவு கூர்ந்து உறையின் வெளிப்பக்கத்தில் **கருத்துரை (COMMENT)** என்று எழுதி வரவேற்பு அலுவலரிடம் கொடுக்கவும்.

உங்கள் விசாரத்தைக் கேட்டறிந்து அதற்குக் கூடிய விரைவில் இணங்குவதற்கு உதவ, பின்வரும் படிமுறைகளை அளிக்கிறோம்;

## step 1 initial discussion with your worker
## படி 1 உங்கள் பணியாளருடன் தொடக்க உரையாடல்

முதலில், உங்கள் விசாரம் பற்றி உங்கள் அறிவுறையாளர் அல்லது பணியாளருடன் பேசவும். நீங்கள் இருவரும் சேர்ந்து உங்கள் பிரச்னைக்கு முடிவு காண வழியுண்டா என்று அறிய இது உங்களுக்கு வாய்ப்பளிக்கும். பெரும்பாலான தருணங்களில் இந்தத் தொடக்க உரையாடல் மட் டுமே தேவைப்படும் என்று எதிர்பார்க்கிறோம். உங்கள் கருதுக்களை எழுதி வைத்து சந்திப்புக்குக் கொண்டு வருவது உங்களுக்கு உதவியாக இருக்கலாம். நீங்கள் விரும்பினால், ஒரு நண்பரையோ கருத்துரையாளரையோ உங்களுக்கு உதவச் செய்யுங்கள் அல்லது உங்களுடன் உங்கள் பணியாளரைச் சந்திக்க அழைத்து வாருங்கள்.

## step 2 discussion with supervisor or manager
## படி 2 மேற்பார்வையாளர் அல்லது மேலாளருடன் கலந்துரையாடல்

உங்கள் பணியாளருடன் கலந்துரையாடிய பின் உங்களுக்கு இன்னும் மனநிறைவு இல்லையென்றால், தயவு செய்து உங்கள் மேற்பார்வையாளர் அல்லது மேலாளருடன் தொடர்பு கொள்ளவும். அவர் உங்களுடன் 5 வேலைநாட்களில் சந்திக்க முன்வருவார். உதவுமானால் ஒரு நண்பர் அல்லது கருத்துரையாளரை உங்களுடன் அழைத்து வரலாம். மேற்பார்வையாளர் உங்கள் பணியாளரை சந்திப்புக்கு அழைக்கலாம், மேலும் அவருடன் தனியாக சந்தித்து உங்கள் விசாரங்களைப் பற்றி இது வரை என்ன செய்யப்பட்டுள்ளது என்று கேட்டறியலாம்.

இந்த சந்திப்புக்குப்பின் 5 நாட்களில் நீங்கள் எட்டியுள்ள உடன்பாடு உறுதியாக்கம் பற்றித் தெரிவித்து மேற்பார்வையாளர் ஒரு கடிதம் கொடுப்பார். உடன்பாடு ஒன்றும் எட்ட முடியவில்லையென்றால், மேற்பார்வையாளரின் முடிவை உங்களுக்குத் தெரிவிப்பார்.

**step 3 discussion with the executive director**
**படி 3 செயலாட்சி இயக்குநருடன் கலந்துரையாடல்**

முந்திய படிகள் உங்களுக்கு தனிமனநிறைவு தரவில்லையென்றால், நீங்கள் நிர்வாக இயக்குநருடன் தொடர்பு கொள்ளலாம். அவர் உங்களுடன் 5 வேலைநாட்களில் சந்திக்க முன்வருவார். உங்கள் விசாரங்களைப் பற்றி இது வரை என்ன செய்யப்பட்டுள்ளது என்று மேற்பார்வையாளரிடம் நிர்வாக இயக்குநர் கேட்டறிவதுடன், மேர்பார்வையாளரை அல்லது வேறு பணியாளரை சந்திப்பில் கலந்துகொள்ள அழைக்கலாம்.

இந்த சந்திப்புக்குப்பின் 5 நாட்களில் நீங்கள் எட்டியுள்ள உடன்பாடு உறுதியாக்கம் பற்றித் தெரிவித்து மேற்பார்வையாளர் ஒரு கடிதம் கொடுப்பார். உடன்பாடு ஒன்றும் எட்ட முடியவில்லையென்றால், நிர்வாக இயக்குநர் முடிவை உங்களுக்குத் தெரிவிப்பார்.

**step 4 discussion with the board of directors**
**படி 4 இயக்குநர் குழுமத்துடன் கலந்துரையாடல்**

முந்தியப் படிகள் உங்கள் விசாரத்தை மனநிறைவு தரும்படி கவனிக்கவில்லையென்றால், நீங்கள் நிர்வாக இயக்குநருடன் தொடர்பு கொண்டு, முகவாண்மையின் இயக்குநர் குழுமத்தின் சார்பாளருடன் சந்திக்கக் கோரலாம். 30 நாட்களுக்குள் ஒரு சந்திப்பு நியமிக்க முன்வருவார்கள். உதவுமானால் ஒரு நண்பர் அல்லது கருத்துரையாளரை உங்களுடன் தாராளமாக அழைத்து வரலாம்.

உங்கள் விசாரங்களைத் தீர்வு செய்ய இது வரை எடுக்கப்பட்ட படிகளின் சுருக்கம் குழுமத்தின் சார்பாளரிடம் இருக்கும். இந்த சுருக்கத்தின் ஓர் பதிப்பு உங்களுக்கு அளிக்கப்படும்.

நீங்கள் சந்திக்கும்போது நீங்களும் குழும சாற்பாளரும் இது வரை நடந்த முயற்சிகளைத் சீராய்வு செய்யலாம், மேலும், பிரச்னையை முடிவு செய்ய ஆங்கிருக்கும் மாற்று வழிகள் என்ன என்பதைக் கலந்தாலோசிக்கலாம்.

இந்த சந்திப்புக்குப்பின் 10 வேலைநாட்களுக்குள், குழுமம் எட்டியுள்ளத் தீர்மானத்தைத் தெரிவித்து உங்களுக்கு ஓர் கடிதம் வருவதை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

step 5

**படி 5** நீங்கள் படி 1 முதல் 4 வரை சென்று முடித்தபின்னும் உங்களுக்கு மனக்குறை இருந்தால், நீங்கள் குழந்தைக்குப் பரிந்து வாதாடுதல் அலுவலகத்துடன் குறையீடு கொண்டு தொடர்பு கொள்ளலாம் என்பதை அறியவும்.
(416) 325-5669 அல்லது 1-800-263-2841

## Our Multidisciplinary Approach
## எங்கள் பல்வேறு அறிவியல் அணுகுமுறை

உளநலச் சிக்கல் இருப்பதால் பல இளைஞரும் அவரது குடும்பத்தாரும் கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகத்துக்கு (EMYS) குறித்தனுப்பப் படுகிறார்கள். அவர்கள் ஒதுக்கல் நிலையில் வாழ்வதுடன், சீரான உறவுத் தொடர்புகள் உருவாக்க இயலாது இருக்கலாம். அத்துடன், உடல், அறியும் ஆற்றல், மற்றும் வேறு இடர்கள் சார்ந்து அவர்களின் சூழலில் குழப்பம் இருக்கலாம்.

நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் எதிர்நோக்கக் கூடிய சிக்கல்களின் முழுமைத்தன்மையையும், அந்த சிக்கல்களை குடும்பம், கலாச்சாரம், சமூகம் அனைத்தும் சார்ந்த சூழமைப்பில் சிகிச்சை செய்ய வேணடிய அவசியத்தையும் EMYS–இன் பல்வேறு அறிவியல் அணுகுமுறை கண் டுகொள்கிறது.

ஏற்பு செயல்முறை நடத்தும்போது, உங்களுக்குத் தேவைப்படக்கூடிய பல்வேறு அறிவியல் உள்ளீட்டின் அளவை EMYS நுழைவுப் பணியாளர் நிர்ணயிப்பார்கள். வேறு துறைகளிலிருந்துப் பங்குகொள்ளுதல் தேவைப்பட்டால், அவை உங்கள் ஆற்றல் மற்றும் தேவைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும். EMYS–இல், பல்வேறு அறிவியல் அணுகுமுறையில் பங்கு கொள்ளும் கலைத்தொழிலர் பல துறைகளிலிருந்து எடுக்கப்படுகின்றனர், கீழ்கண்டவை உட்பட;

- குழந்தை உளநோய் மருத்துவர்
- குழந்தை உளநூல் வல்லுநர்
- குழந்தை மற்றும் இளைஞர் சேவையாளர்கள்
- செவிலிகள்
- ஆசிரியர்கள்
- குழந்தை மற்றும் குடும்ப மருத்துவப் பண்டத்தில் அனுபவமுள்ள் சமூக சேவையாளர்கள்

## Accessing Service
## சேவைப் பெறுதல்

எங்களுடைய எந்த சேவையும் அடைய, எங்கள் தலைமை எண் அழைத்து ஒரு நுழைவுப் பணியாளரிடம் பேச வேண்டும் என்று கேட்கவும். அழைக்க 416-438-3697

இளைஞர் மற்றும் பெற்றோரிடமிருந்து நேரடியாக எங்கள் நுழைவுப் பணியாளர் அழைப்பு ஏற்பார்கள். அத்துடன் அவர்கள் பள்ளிகள், மருத்துவமனைகள், திருத்துமுறை சேவையகங்கள், குடும்ப மருத்துவர்கள், குழந்தை ஆதார சங்கங்கள், முதலியவற்றிலிருந்து குறித்தனுப்புகைப் பெறுவார்கள்.

உங்கள் சூழ்நிலையையும் தேவைகளையும் தெளிவாக அறிந்துகொள்ள, நுழைவுப் பணியாளர் உங்களிடம் கேள்விகள் கேட்பார். நெருக்கடி நிலைகளில் நுழைவுப் பணியாளர் தொலைபேசி வழியாக ஆதாரம் அளிப்பதுடன், வாடிக்கையாளரை பொருத்தமான கிழக்கு மெட்ரோ இளஞர் சேவையகத்தின் திட்டமுறைக்குக் குறித்தனுப்புகை செய்வார்கள்.

வேறு ஒரு நிறுவனம் இன்னும் பொருத்தமாக இருக்குமென்று கருதினால், நுழைவுப் பணியாளர் சிபாரிசு செய்து, அந்த மற்ற நிறுவனத்துடன் உங்களை இணைக்க உதவுவார்.

நீங்கள் ஒரு பெற்றோர் அல்லது இளஞராக இருந்து, ஒரு EMYS சேவை உங்களுக்குப் பொருந்தும் என்று கருதினால், நுழைவுப் பணியாளர் உங்களுடன் மேலும் பேட்டித் தொடர்பு கொள்வார். வழக்கமாக இது தொலைபேசி வழியாக நடத்தப்படும், ஆனால் நீங்கள் அதை நேரில் செய்ய விரும்பினால், அதற்கும் ஏற்பாடு செய்யலாம்.

இந்தப் பேட்டிகள், எல்லாக் குழந்தை மனநல நிலையங்களிலும் நடத்தப்படும் தரப்படுத்தப்பட்ட பேட்டிகளாகும். உங்கள் சூழ்நிலையைப் பற்றி நல்தரமான, விவரமான உணர்வு பெற எங்களுக்கு உதவக்கூடியவை.

இளைஞருடன் நடத்தும் பேட்டி 10 நிமிடங்கள் எடுக்கும். பெற்றோருடன் நடத்தும் பேட்டி ஏறத்தாழ அரை மணி நேரம் எடுக்கும்.

நீங்கள் இளைஞராக இருந்தால், EMYS-இல் சிகிச்சைப் பெற உங்கள் பெற்றோரை ஈடுபடுத்தத் தேவையில்லை. எனினும், அப்படி ஈடுபடுத்த உங்களை ஊக்குவிக்கிறோம். நம்பிக்கைத்தனம் பெறுவதற்கான உங்கள் உரிமையைப் பற்றி மேலும் தகவல் அறிய, EMYS-இல் 'தனிமறைப்பு நிலையும் நம்பிக்கைத்தன்மையும்' என்னும் எங்கள் கொள்கைப் பதிப்பைப் பார்வையிடவும்.

உங்களுக்குத் தேவைப்பட்ட செயல்திட்டமுறையைப் பொறுத்து, நுழைவுப் பணியாளர் உங்களுக்கு ஓர் சந்திப்பு ஏற்பாடு செய்வார் அல்லது உங்களைக் காத்திருப்புப் பட்டியலில் சேர்ப்பார்.

Case Management
**தொழில்முறை வாடிக்கையாளர் விவகாரம் மேலாண்மை**

வேறு மனநல நிலையங்கள், மருத்துவ மனைகள், பள்ளிகள், சமூக நிலையங்கள், நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலகங்கள், மற்றும் குழந்தைப் பாதுகாப்பு சேவையகங்கள் ஆனவற்றுடன் நீண்ட கால கூட்டாண்மை கொண்டுள்ளமைக்கு கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகம் நற்பெயர்பெற்றது. பலவகைப்பட்ட சிகிச்சைமுறைகளை வகைப்படுத்தித் தேர்ந்தெடுக்க உதவவும், எங்கள் கவனிப்பில் உள்ளோர் அனைவருக்கும் தொடர்ச்சியான, ஒருங்கிணைப்பான, சரியான நேரத்தில் நிகழ்கிற சிகிச்சை கிடைப்பதை உறுதிப்படுத்தவும், முதல் தொடர்பு நேரும்போது ஒரு நோய்விவகார மேலாண்மையாளர், அல்லது சேவை ஒருங்கிணைப்பாளர், பொறுப்பளிக்கப் படுவார்.

சேவைகள் கிடைக்கக் காத்திருக்க வேண்டிய நிலையில், அவர்களுடைய தேவைகளைப் பாதிக்கும்படியான சிறப்பாடுடைய நிகழ்ச்சிகள் நேரக்கூடும் என்பதால், வாடிக்கையாளரும் அவருடைய குடும்பத்தாரும் அவர்களுடைய நோய்விவகார மேலாண்மையாளருடன் தொடர்பு வைத்துக் கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

இறுதியாக, EMYS சிகிச்சை முடிவடையும் தறுவாயில், தொழில்முறை வாடிக்கையாளர் விவகார மேலாண்மையாளர் தேவைப்படக்கூடிய குறித்தனுப்புகைகள் செய்யலாம்.

## The Clinical File
**படுக்கை மருத்துவ நடைமுறைச் சார்ந்தக் கோப்பு**

வாடிக்கையாளரின் மதிப்பீடு மற்றும் சிகிச்சைமுறைத் திட்டம் சார்ந்த விவரக் குறிப்புகள் அடங்கியது மருத்துவ நடைமுறை சார்ந்த கோப்பு. அது பயனுடைய ஒரு ஒழுங்குபடுத்தும் கருவி, மேலும் அது அரிய தகவல் பெற உதவுகின்ற, பொருள்நிறைந்த அடிமூலமாயிருக்கும்

## The Client's Assessment
**வாடிக்கையாளரின் மதிப்பீடு**

தெரிவிக்கப்பட்ட பிரச்னையை விவரிப்பதுடன், வாடிக்கையாளரின் சம்மந்தப்பட்ட வரலாறு, ஆற்றல்கள், குறிக்கோள்கள், மற்றும் நோய்நீக்கல் சார்ந்த தேவைகளும் விசாரங்கள் அனைத்தையும் மதிப்பீடு உட்கொள்ளும். பெற்றுள்ள சேவைகளும், பெறப் போவதும் சேர்த்து இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மருத்துவ நடைமுறை சார்ந்த பகுப்பாய்வும், சிகிச்சைமுறைத் திட்டம் அல்லது சேவைமுறைத் திட்டமும் இந்தக் கோப்பில் காணப்படும்.

## The Client's Treatment or Service Plan
**வாடிக்கையாளரின் சிகிச்சைமுறைத் திட்டம் அல்லது சேவைமுறைத் திட்டம்**

சிகிச்சை அல்லது சேவைமுறைத் திட்டம் வாடிக்கையாளரின் தேவைகளும் ஆற்றல்களும் பற்றிய விவரக்குறிப்பு உட்படுவதுடன், அவருடைய மற்றும் அவர் குடும்பதாருடைய கருத்துக்களை ஓர்வு செய்கிறது. சிகிச்சை முறைகள், குறிக்கோள்கள், எதிர்பார்க்கப்படும் கால அளவும் விளைவுகளும் சார்ந்த உருவரைக் குறிப்பும் தருகிறது. வாடிக்கயாளரின் முன்னேற்றத்தைப் பதிவு செய்து, உடன்பாடு செய்யப்பட்டத் தீர்வுத் திட்டங்களையும், அத்துடன் தேவை அல்லது விருப்பிற்கேற்ப பின்தொடரும் சேவைகளையும் விவரிக்கிறது.

வாடிக்கையாளர், பணியாளர், மற்ற கலந்துகொண்ட தொழில் நிபுணர்கள் சேர்ந்து உருவாக்கப்பபடுவது இந்தத் திட்டம். வாடிக்கையாளரின் குடும்பத்தாரும் இந்த செயல்முறையில் ஈடுபடக்கூடும்.

## Clinical Record Keeping
**படுக்கைமருத்துவ நடைமுறைப் பதிவணம் அமைத்தல்**

சட்டமன்ற தேவைப்பாடுகளுக்கும், ஒன்டேரியோ குழந்தை மனநலம் சார்ந்த முறைப்படி அதிகாரம் பெறும் தரப்பாடுகளுக்கும் ஏற்ப, ஒவ்வொரு வாடிக்கையாளரின் மறைவுரிமையை பாதுகாக்கப் பொறுப்பேற்றுள்ளது EMYS. சிகிச்சைக்கு இன்றியமையாத தகவல் மட்டுமே திரட்டப் படுகிறது. சிகிச்சை நடக்கும்போதும் அதற்குப் பிறகும் எந்த நேரத்திலும் வாடிக்கையாளர் அவருடைய கோப்புக்கு நுழைவுரிமை உண்டு., EMYS–இன் எந்த கோப்பின் ஒரு பதிப்பும் வாடிக்கையாளர் கோரப் பெறலாம்.

**Things to Know Before You Get Started;**
**தொடங்குமுன் நீங்கள் அறிய வேண்டியவை;**

டீன் வயது காலம் எப்பொழுதும்ஏளிதாக இருக்காது என்பதைகிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகத்தைச் சேர்ந்த நாங்கள் புரிந்துள்ளோம்.பெரும்பாலும், உங்களுக்கு விசாரம் அளிக்கும் பிரச்னைகளைப் பற்றி ஏதாவது செய்ய வேண்டும் என்று நீங்கள் எவ்வளவு விரைவில் முடிவெடுக்கிறீர்களோ, அவ்வளவுக்கு எளிதாக இருக்கும் அவற்றை வெற்றிகரமாக தீர்வு செய்ய.

மன நோய், கற்றல் இயலாமை, மருந்து சரக்கு ஈடுபாடு, பால்சார்ந்த செய்கை, மனச்சோர்வு. தாழ்வானத் தன்மதிப்பு, ஆகியவற்றைக் கையாளுவதற்கு உங்களுக்கு EMYS ஆதாரமாக இருக்க முடியும். குடும்ப சண்டை மற்றும் வேறு உறவுத் தொடர்பு சார்ந்த பிரச்னைகளை நல்வகைப் படுத்த நாங்கள் உங்களுக்கு உதவ முடியும்; அத்துடன், அன்பிற்குரியவரின் இழப்பைக் கையாளவும் உதவ முடியும். ஒடுக்கல் வன்மை,வன்முறை, தவறாக நடத்துதல், போன்றவற்றை நீங்கள் கண்டால், அனுபவித்தால், அல்லது செய்தால், அதிலும் உங்களுக்கு நாங்கள் உதவ முடியும். ஒதுக்கப்படும் தனிமை உணர்ச்சி, தற்கொலை செய்யும் எண்ணங்கள், தன்னூறு செய்யும் மனப்பாங்கு, மற்றும் கோபம் வெளிப்படுத்த இயலாமை, போன்ற விவகாரங்களை நீங்கள் இனிமேல் தனிமையில் எதிர்கொள்ள வேண்டியதில்லை.

**Things to consider before you begin therapy:**
**சிகிச்சைமுறை தொடங்குமுன் நீங்கள் கருத வேண்டியவை;**

- நீங்கள் சீர்நிலை அடைந்ததாக உணருவதற்குமுன், சீர்கெட்ட உணர்ச்சி பெறலாம்
- சிகிச்சைமுறை கடினமான வேலை, அத்துடன் சில நேரம் அச்சம் தரக்கூடும்
- உங்கள் பிரச்னைகளைக் கையாளுவது உங்களைத் திணறடிக்கச் செய்யலாம், அதனால் உங்கள் தொல்லைகளைப் பொருட்படுத்தாமல் விட்டு செல்லத் தோன்றலாம்
- நீங்கள் அறிவுரை பெறுகிறீர் என்று கேள்விப்பட்டால் சிலர் உங்களுக்கு ஆதாரமாக இல்லாமல் போகலாம்
- நீங்கள் எதிர்பார்த்ததை விட அதிக தாமதம் ஏற்படலாம்

**Things to know about EMYS:**
**EMYS பற்றி அறிய வேண்டியவை;**

- வேறுபாடுகளை நாங்கள் மதிக்கிறோம்
- கடினமான விவகாரங்கள் பற்றிப் பேச நாங்கள் பாதுகாப்பான, நம்பகமான, ஆதாரம் தரும் இடம் அளிக்கிறோம்
- பிரச்னைத் தீர்வு செய்வதற்கு உங்களுக்கு உடந்தையாக இருப்பதுடன், உங்களுக்குக் கடினமாகத் தோன்றும் கட்டங்களைக் கையாளுவதற்குப் புதிய கருத்துக்களை உருவாக்க உதவுவோம்
- உங்கள் வாழ்வை நீங்கள் மீண்டும் உங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர உதவுவோம்
- உங்கள் ஆற்றல்களை நீங்கள் உணர்ந்து எழுப்ப உங்களுக்கு உதவுவோம்
- எங்கள் முகவாண்மையில் அல்லது வேறு இடத்தில் உங்களுக்குத் தேவையாக இருக்கக்கூடிய ஒருங்கிணைந்த சேவைகளையெல்லாம் நீங்கள் பெற உதவும்படியாக உங்களுடன் ஒத்துழைக்கிறோம்

## Counselling - Individual and Family Therapy
## அறிவுரை – தனிப்பட்டோர் மற்றும் குடும்ப சிகிச்சைமுறை

கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகம் தனிப்பட்டோர் மற்றும் குடும்ப அறிவுறை அளிக்கிறது. நடைமுறையாக, 1200 மார்க்கம் சாலையில் உள்ள எங்கள் தலை அலுவலகத்தில் வாரம் ஒரு முறை ஒரு அறிவுரையாளரை சந்தித்துப் பேசுவது உட்படும். இது ஒரு நீண்டகால அணுகுமுறை. வாடிக்கையாளர் தம் உறவுத் தொடர்புகளை மாற்றியமைப்பதற்கும், புதிய திறன்கள் பெறவும், மாற்றமுடியாதவற்றைக் கையாள அல்லது ஏற்றுக்குக் கொள்ளவும், மற்றும் தம்மைத்தாமே அல்லது தம் நிலைமைகளை அறிந்துணரவும், ஆதாரம் தந்து உதவுவதே இதன் உட்கருத்து.

நீங்கள் சிகிச்சைமுறைக்கு வரும் வேளைகளும், அதில் ஈடுபட்டிருக்கும் காலத்தின் நீளமும், நீங்கள் என்ன சாதிக்க விரும்புகிறீர்கள் என்பதை பொருத்தது. ஒவ்வொரு நிலைமையும் தனித்தன்மை வாய்ந்தது, மற்றும், நாங்கள் அளிக்கும் சேவைகள் நீங்கள் எதிர்நோக்கும் விவகாரங்களைக் கவனிக்குமாறு தனிப்பட்டதாக அமைந்துள்ளது.

## How do I obtain counselling services?
## நான் எப்படி அறிவுரைச்சேவைகளைப் பெற முடியும் ?

ஒரு EMYS நுழைவுப் பணியாளருடன் தொடர்பு கொள்ளவும். எங்கள் சிகிச்சையாளரில் ஒருவருடன் ஒரு முதல்நிலை கேள்வித்தொடர்பு கொள்ள சந்திப்பு ஏற்பாடு செய்யப்படும். அந்த நேரத்தில் உங்கள் சிகிச்சைமுறையைத் திட்டமிடுவதற்குத் தேவையானத் தகவல் திரட்டப்படும். ஒரு முகவாண்மைக் கோப்பு தொடங்குவதற்கு சில ஆவணங்களில் நீங்கள் கையொப்பமிடும்படி கேட்டுக்கொள்ளப் படுவீர்கள். உங்களுடன் நடத்தும் அறிவுரைச் செயல்பாட்டின் குவிமையம், நீங்கள் எத்தனை முறை வருவது தேவைக்குப் பொருந்தும், அறிவுரக் கூட்டத்தொடர்புகள் சரியாக எப்போது தொடங்க முடியும் என்பதையெல்லாம் பற்றி சிகிச்சையாளர் உங்களுடனும் – உங்கள் குடும்பத்தார் கலந்துகொள்வதாக இருந்தால் – அவர்களுடனும் கலந்துரையாடுவார்.

## How long is the wait for counselling?
## அறிவுரைச் செயல்பாடு தொடங்க எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும் ?

விரிவான வேறுபாட்டு எல்லையளவில் உணர்ச்சி மற்றும் நடத்தை சார்ந்த பிரச்னைகள் தொடர்பாக EMYS இளைஞருக்கும் குடும்பங்களுக்கும் அறிவுரை தரும் சேவைகளை அளிப்பார்கள். அதனால், மதிப்பீடு செய்த அளவு ஆபத்து நிலையும் தேவையும் பொருத்து கருத்துரைப் பெறக் கோரிக்கைகள் நிர்வகிக்கப்படும்.

சந்திப்பு ஏற்பாடுகளுக்கு நீங்கள் எவ்வளவு எளிதில் இசைவிணக்கம் காட்ட முடியுமோ, அவ்வளவுக்குத்தக்க விரைவில் உங்களைப் பார்க்கக் கூடும்.

## Counselling - Multi-Systemic Therapy
## அறிவுரைச் செயல்பாடு – பல்வேறு–அமைப்புச் சிகிச்சை முறை (MST)

குடும்பம் முழுமையாக, பல்வேறு–அமைப்பு சிகிச்சைமுறையின் (MST) குவிமையமாகும். அது மூன்று முதல் ஆறு மாதங்கள் நீடிக்கும், வீட்டிலும் சமூகத்திலும் அளிக்கப்படும். குடும்பம் எதிர்நோக்கும் சிக்கல்களை – அவை எங்கிருந்தாலும்; வீட்டில், பள்ளியில், அல்லது

உடன்சேர்ந்தவர் மற்றும் சமூக சூழல்களில் – அவற்றை வெற்றிகரமாகக் கையாளுவதற்கு குடும்பத்தின் ஆற்றல்கள் மீது முழு கவனம் அமைக்கப்படும்.

MST includes:
MST உட்படுவது;

- வீட்டிலும் மற்ற சமூக அமைவிடங்களிலும் செறிவான சிகிச்சை செய்தல்
- 24–மணி நேர கைதொலை அழைப்பு கருவி வழியக நெருக்கடி அழைப்புக்கு வசதி
- பெற்றோருக்கு ஆதரவு தருதல்

**Who is eligible? Youth who are:**
**தகைமை உடையவர் யார் ? இவ்வகையான இளைஞர்;**

- வேலையில்லாது இருப்பவர்
- பள்ளியில் இல்லாதவர், அல்லது வெளியேற்றப்படக்கூடிய இடரில் உள்ளவர்
- மது, சட்டவிலக்கான மருந்துப் பொருள்கள், அல்லது கரைநிர்மங்கள் பயன்படுத்துபவர்
- மருந்துக் குறித்தலுக்குட்பட்ட மருந்துகளை தவறான பயனீடு செய்பவர்கள்
- மருந்து பொருள்களைத் தவறாகப் பயன்படுத்துவதாக பெற்றோர் அல்லது காப்பாளர ஐயப்படுபவர்
- வீட்டு–வெளியமைப்புக்குள்ளாகும் இடர்நிலையில் இருப்பவர்; அல்லது
- திருத்தமுறை சார்ந்த அல்லது குடியிருப்பு நிறுவனங்கள், மருத்துவமனைகள், நெருக்கடி நிறுவனங்கள், பாதுகாப்பு நிலையங்கள், அல்லது குழந்தை நல அமைப்பு, ஆகியவற்றில் இருந்து திரும்புபவர்

**Counselling - Priority Access for Child Welfare**
**அறிவுரைச் செயல்பாடு – குழந்தை நல நுழைவு முந்துரிமை**

கிழக்கு மெட்ரோ பணியாளரிடமும் மற்றும் பல்வேறு–அமைப்பு சிகிச்சைமுறை (MST) திட்டத்திலும் கிழ்குறித்துள்ள குழந்தை நல முகவாண்மைகளில் எவற்றுடனும் தொடர்பு கொண்டுள்ளக் குடும்பங்கள் முந்துரிமை நுழைவுத் தகுதிநிலை பெறுவார்கள்.

வீட்டில், பள்ளியில், மற்றும் சமூகத்தில் குடும்பம் முழுமைக்கும் MST பரந்த சிகிச்சை அளிக்கும். அது தனிப்பட்டோரின் மற்றும் குடும்பத்தின் ஆற்றல்களின் மேல் முழு கவனம் அமைத்து, எங்கள் வாடிக்கையாளர் எதிர்நோக்கும் சிக்கல்களைக் கையாள உதவுகிறது. டொரோன்டோ நகர் எங்கும் இந்த சேவை அளிக்கப்படுகிறது.

12 முதல் 18 வயது வரை குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு கீழ்கண்ட சூழலில் MST சேவை புரிய வடிக்கப்பட்டுள்ளது;

- மருந்துப் பொருள்கள் பயன்படுத்தல்
- வீட்டு–வெளியமைப்புக்குள்ளாகும் இடர்நிலையில் இருத்தல்

- வீட்டில் சொல்லால் அல்லது உடல்சார்ந்த ஆக்கிரமிப்புக் காட்டுதல்
- பள்ளிக்குச் செல்லத் தவறுதல், வெளியேற்றம் செய்யப்படும் இடரில் இருத்தல்
- இளைஞர் நீதி நிறுவனத்துடன் ஈடுபட்டிருத்தல்; அல்லது
- அமைப்பு நிலையிலிருந்து திரும்பியிருத்தல்

நாங்கள் அளிப்பது;

- வீட்டில் அல்லது வேறு சமூக அமைவிடங்களில் மூன்று முதல் ஆறு மாதங்கள் வரைநீடிக்கும் செறிவான சிகிச்சை
- 24–மணி நேர கைதொலை அழைப்பு கருவி வழியக நெருக்கடி அழைப்புக்கு வசதி
- பெற்றோருக்கு வளர்ப்புமுறை ஆதரவு தருதல்

குறித்தனுப்புகை ஆதாரங்கள்;

- டொரோன்டோ குழந்தை ஆதரவு குழுமம் (Children's Aid Society of Toronto)
- டொரோன்டோ கத்தோலிக்கக் குழந்தை ஆதரவு குழுமம் (Catholic Children's Aid Society of Toronto)
- டொரோன்டோ முதல்குடிமக்கள் குழந்தை மற்றும் குடும்ப சேவையகம் (Native Child and Family Services of Toronto)
- யூதர் குடும்பம் மற்றும் குழந்தை சேவையகம் (Jewish Family and Child Service)

**Counselling - Intensive Child and Family Services**
**அறிவுரைச் செயல்பாடு – செறிவான குழந்தை மற்றும் குடும்ப சேவைகள்**

நெகிழ்வுடைய மனநல நோய்தீர்ப்பு செயல்முறைகளை மேற்கொள்ளுவதால், குழந்தைகளும் இளைஞரும் தம் வீடுகளிலும் சமூகத்திலும் செம்மையாகச் செயல்பட இயல்விக்கும் இந்த சேவை. கீழ்க்கண்டவற்றை அனுபவித்துக் கொண்டிருப்பவர், அல்லது அனுபவிக்கக் கூடிய இடர்நிலையில் இருப்பவர்களுக்கு, உதவ இந்த சேவை வடிக்கப்பட்டிருக்கிறது;

- வீட்டில் உறவுத்தொடர்புகள் சீர்குலையும் நிலையில் இருத்தல்
- பள்ளியில் வெளியேற்றப்படக்கூடிய அளவுக்குக் கடுமையான இடர்பாடுகள்
- தம் சமூகத்துக்குப் பொருந்தி நடப்பதில் கடுமையான இடர்பாடுகள்
- குழந்தை நலம், இளம் குற்றவாளி, அல்லது மனநல அறிவியல் அமைப்பு ஆகியவைச் சார்ந்தத் திட்டங்களில் இருந்து வந்து மாற்றநிலை அடைவதில் இடர்பாடு

**We offer**
**நாங்கள் அளிப்பது**

- குடும்ப உறவுத் தொடர்புகளைக் குவிமையமாகக் கொண்ட குறுகியக் கால சிகிச்சைமுறைகள்
- வீடு, பள்ளி, அல்லது சமூகத்தில் செறிவான சேவைகள்

- நாள் 24 மணி நேரமும், வாரம் ஏழு நாட்களும் அழைப்புத் தயாரான சேவைகள்

ஆய்ஸ்லிங் கண்டுபிடிப்புகள் குழந்தை மற்றும் குடும்ப நிலையம் (Aisling Discoveries Child and Family Centre) என்னும் நிறுவனத்துடன் இணைந்து செயல்பட்டு இந்த சேவை அளிக்கப்ப டுகிறது.

இந்த சேவை குறுகிய கால அளவிலானதால், 12 வாரம் வரை நிகழும் காலக் கட்டுமானத்தில் எய்துபெறக்கூடியத் துல்லியமான குறிக்கோள்களை சேவைபெறுவோர் அமைத்துக்கொள்வது முக்கியமாகும்.

**Counselling - Whatever It Takes (W.I.T.)**
**அறிவுரைச் செயல்பாடு – தேவை எதுவானாலும் (W.I.T)**

கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகமும் க்ரிஃபின் நிலையமும் (The Griffin Centre) இணைந்து நடத்துவது 'தேவை எதுவானாலும்' என்னும் செயல்முறைத் திட்டம். சிக்கலான ப டுக்கைமருத்துவ நடைமுறைத் தன்மையும் சேவைத்தேவைகளும் கொண்ட குழந்தைகள் மற்றும் இளஞர் – பிறப்பு முதல் 18 வயது வரை – தேவைகளுக்கு இந்த சேவை செயல்முறைத் திட்டம் இணங்கி செயல்பட இவையிரண்டும் ஒன்றுகூடி உதவுகின்றன. வாடிக்கையாளருக்கு நேரடி சேவைபுரியும் செயல்முறைத் திட்டமல்ல WIT. மாறாக, WIT உதவுவோருக்கு உதவுகிறது. அதாவது, அவரவர் தேவைக்கேற்ப பொருத்தமான சேவைகளைக் கண்டறிந்து அளிப்பதன் மூலமாக சேவை அளித்தல் அமைப்புகள் அனைத்துக்கும் உதவியளிக்கிறது. அத்துடன், சேவை தேவைகளையும் அவற்றில் உள்ள இடைமுறிவுகளையும் WIT பல்வேறு அமைச்சகங்களுக்குத் தெரிவித்துணர்த்துகிறது.

EMYS டொரோன்டோவின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளுக்கு WIT சேவைகளை அளிக்கிறது, EMYS-இன் WIT சேவைகளுடன் தொடர்பு கொள்ள தயவு செய்து 416-438-3697 தொலைபேசி எண் அழைத்து, எங்கள் WIT பணியாளரில் ஒருவரிடம் பேச வேண்டும் என்று கேட்கவும். க்ரிஃபின் நிலையத்தின் WIT சேவைகளுடன் பேச, தயவு செய்து தொலை பேசி எண் 416-222-1153 அழைத்து அவர்களுடைய WIT பணியாளரில் ஒருவரிடம் பேச வேண்டும் என்று கேட்கவும்.

WIT செயல்முறைத்திட்டம், சேவைகள் அமைப்புக்குக் கீழ்கண்ட முறைகளில் உதவுகிறது;

- சேவைகள் அளிக்கும் பல அமைப்புகளின் சிகிச்சைமுறைகளை ஒன்றுபடுத்துகிறது
- பல அமைச்சகங்களிலிருந்து தேவைப்படும் மிக்கத் தனித்தன்மை கொண்ட சிகிச்சைமுறைகளையும் ஆதார செயல் திட்டங்களையும் உருவாக்கி ஒன்றுபடுத்துகிறது
- "பொருந்திச்சேரும்" தன்மை எளிதாக அமையாத நோயாளிகள் சிகிச்சை செயல்முறைகளில் தொடர்ந்து இருப்பதற்கு மிகையான உதவி தேவைக்கு ஆதாரம் அளிக்கிறது
- பல்வேறுபட்ட தனித்தன்மை வாய்ந்த மதிப்பீடுகளும் சிகிச்சைமுறைகளும் பெறுவதற்கு நுழைவுரிமை அளிக்கிறது
- செறிவான, தனித்தன்மை வாய்ந்த குடும்ப நோய்தீர்ப்பு செயல்முறைகள் பெறுவதற்கு நுழைவுரிமை அளிக்கிறது
- சிக்கலான சேவை சார்ந்த கட்டங்களில் இணங்கி உதவ, கூட்டுப்பங்கு கொள்ளும் பொறுப்புணர்ச்சி வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கிறது

- குறைந்த அளவில் உள்ள ஓர் பொதுநிதியில் இருந்து பொருள் பெற வேண்டிய நிலையில், தனிப்பட்டோருக்கு ஒப்ப மாற்றநிலை செயல்முறைகளை வளர்க்க உதவுகிறது
- தேவைப்படும்போது, செறிவான நோயாளர் காரியம் கையாளும் சேவைகள் அளிக்கிறது

**Counselling - Transitional Support Services**
**அறிவுரைச் செயல்பாடு – இடைநிலை ஆதார சேவைகள்**

டொரோன்டோ கிழக்கு பொது மருத்துவமனை (Toronto East General Hospital), மற்றும் ரூஜ் வாலி உடல்நல அமைப்பச் சார்ந்த சென்டெனரி மருத்துவமனை (Centenary Hospital in the Rouge Valley Health System) ஆகிய இரண்டு கிழக்கு டொரோன்டோ மருத்துவ மனைகளின் உள்நோயாளிப் பிரிவிலிருந்து நோயாளி விடுவிப்புச் செயல்திட்டம் வசதி செய்கிறது இடைநிலை ஆதார சேவைகள். சில நிலைகளில், இடைநிலை ஆதார சேவைகள் மருத்துவமனை தங்குதலையே தவிர்க்க உதவுகிறது.

அவர்கள் குடியுள்ள எந்த ஒரு குழந்தை மனநல முகவாண்மையுடனும் தொடர்பில்லாமல், மருத்துவ மனையில் தங்கும் அனுபவம் முதன்முதலில் பெறும் இளைஞருக்கு இந்த சேவை உதவுகிறது.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 48 மணி நேரத்துக்குள் இடைநிலைப் பணியாளர்கள் வந்து சேருவார்கள். நோயாளிக்கும் குடும்பத்தாருக்கும் சேவைகள் திட்டச்செயல் செய்வதற்கும் ஒருங்கமைப்பதற்கும் **பல்வேறு அறிவியல் அணுகுமுறைக் குழுவின் ஓர் பகுதி என்ற முறையில் உதவுவார்கள்.**

**இடைநிலை ஆதார சேவைகளின் மற்ற முக்கியமான செயல்பாடுகள் உட்படுவது; மருத்துவமனையிலிருந்து விடுவிப்புக்கு வசதி செய்வது, மற்றும், இளைஞருக்கும் கு டும்பதாருக்கும் எந்த சமூக முகமைகள் மிக்கத் தகுந்த சேவைகளை அளிப்பார்கள் என்பதை மதிப்பீடு செய்வது. சமூகத்தில் சேவைகள் கிடைப்பதில் தாமதம் இருக்குமானால், சிறிது இடைக்கால அறிவுரையும் ஆதாரமும் தரப்படும்.**

**Day Treatment**
**பகல் மருத்துவப் பண்டுவம்**

டொரோன்டோ மாவட்ட கல்விப் பொறுப்பணர் குழுமத்துடன் கூட்டாண்மை கொண்டு, வயது 12 முதல் 18 வரையுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் EMYS கல்வி செயல் திட்டங்கள் அளிக்கிறது (மூன்று வெவ்வேறு சமூகப் பள்ளிகளிலும், சமூகத்தில் தனிப்பட்டு அமைந்த ஒரு மனையிலும்),

இந்தக் கல்விச் செயல்திட்டங்கள் குறிப்பிட்ட இளைஞருக்கு பின்வரும் சிறப்புத்தன்மை வாய்ந்த உதவி அளிக்கிறது; பல்கலைக் கல்வி, தொழில்சார்ந்த பயிற்சிக்கு அல்லது சமுதாயப் பள்ளிக்குத் திரும்பச் செல்ல ஆயத்தமாக்குதல், மற்றும், வாழ்முறைத் திறன்கள்/உறவு இடைத்தொடர்புகள் உயர்த்துதல். சிறப்புத்திறன்களும் பயிற்சியும் பெற்றப் பணியாளரும் சிறப்புக்கல்விமுறை ஆசிரியரும் அமைக்கப்பட்ட சிறு–குழு சூழல் பட்டறிவுப் பெறும் வாய்ப்பைக் குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு இந்தத் தனிப்பட்டோருக்கமைத்த செயல் திட்டங்கள் அளிக்கின்றன. தெளிவான நடத்தை வழிமுறைகள், குறிக்கோள்–சார்ந்து ஆற்றல்

அடிப்படையில் அமைக்கப்பட்ட அணுகுமுறை, தம் கல்வித் தேவைகளை தாமே வகுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு தரும் செயல்பாடுகள், ஆகியவற்றை இந்த செயல்திட்டங்கள் ஒருங்கிணைக்கின்றன.

## Residential Treatment
## குடியிருப்பிடச் சிகிச்சை

மனக்கலக்கம் கொண்ட வளரிளைஞருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் வளையும்தன்மை கொண்ட, இணக்கமான குடியிருப்பு சிகிச்சை சேவைகளை அளிக்கும் பொறுப்பேற்றுள்ளது கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகம் (EMYS). அந்த நியமித்தத் திட்டத்தின்படி சேவையாற்ற, இந்த முகவாண்மை மூன்று நோய்த்தீர்வு குடியிருப்பகங்களை இயக்குகிறது – அவை ஸ்கார்பொரோவில் இருபத்தைந்து இளைஞர் வரை கொள்திறம் பொருந்திய கவர்ச்சியான சமூக வீடுகளில் அமைந்துள்ளன.

## Program Function
## பணித்திட்ட செயலாற்றுமுறை

சமூகத்தில் உள்ள மற்ற முதிர்வடைந்த இளைஞர்களின் அளவுக்கு, தன்னாண்மையுடனும் செம்மையான செயல்திறனுடனும் இயங்கும் தன்மையில் குறுக்கிடும் சிக்கலான, பல்வேறு வகைப்பட்ட பிரச்னைகளுடன் போராடும் இளைஞருக்கு, வளையும்தன்மை அமைந்த, தனிப்பட்டமுறையான சிகிச்சை – குறுகிய அல்லது நீண்ட கால அளவில் – அளிப்பது (EMYS–இன் நியமித்தத் திட்டம்)

## Admission Criteria
## நுழைவுத் தேர்வு அளவை

விரிந்த, வேறுபட்ட பிரிவினைச்சேர்ந்த இளைஞர், ஆணும் பெண்ணும், 12 முதல் 17 வயது வரை, சிறப்புத்தன்மையான கவனிப்பும் சிகிச்சையும் இல்லாமல் ஆற்றலுடன் கையாளும் திறன் மீறும் அளவுக்கு விடாப்பிடியாக, ஊடுருவிப்பரவிய சிக்கல்கள் அமைந்தவர்கள் – அதாவது இளம்தொடக்க நிலையில் உள்ள மனநிலைக் குழப்பம், பாழாக்கும் வகையில் சீர்கேடாய் நடத்தப்பட்ட அனுபவங்கள், நீடித்தப் புறக்கணிப்பும் வறுமையும், செறிவான, தீர்வு காணாத குடும்ப சச்சரவு, கல்விகற்றல் மற்றும்/அல்லது நடத்தை சார்ந்த பிரச்னைகள்.

வளப்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் மூலமானது வேறுபாடுடைய நிலை என்று நோக்கும் செயல்திட்டங்களின் உள்ளடக்கும் தத்துவக் கட்டமைப்பிற்கேற்ப, பின்வரும் இளைஞர்களுக்கு மட்டும் நுழைவு தராது விலக்கும் உரிமையை ஒதுக்கியுள்ளோம்; கடுமையான வலியத்தாக்கும் தன்மையை அடுத்துக்காட்டும் நிலையில் உள்ளவர்கள், இளம் குற்றவாளிகள் சட்டப்படி காப்புப் பொறுப்பு தண்டனை அனுபவித்துக்கொண்டிருப்பவர்கள், அறிவுவளர்ச்சி ஊன நிலையில் அறிவுத்திறன் அளவை (IQ) அமைந்தவர், மற்றும்/அல்லது, நிகழும் மருத்துவ அல்லது மனநிலை சார்ந்த இடர்பாடு இருந்தும் அதை சமநிலைப்படுத்தும் சிகிச்சைப் பெற மறுப்பவர்கள்.

## Referral Sources
## குறித்தனுப்புகை ஆதாரங்கள்

மேகன் குடியிருப்பகம் (The Megan Residence) ஓர் 'முழுமையாக நிதி வழங்கப்பட்ட' செயல்திட்டமாகும் – அதாவது, மாநில குழந்தை மற்றும் இளைஞர் சேவை அமைச்சகம் அளிக்கும் நிதி கொண்டு அதைச்சார்ந்த செலவுகள் பெரும்பாலாக உள்ளடக்கமாகின்றன. ஒருமுகப்படுத்தப்பட்ட குடியிருப்பு சேவைகளுக்கு நுழைவுரிமை (Centralized Access to Residential Services - CARS) வழியாக செய்யப்படும் சமூகக் குறித்தனுப்புகை முறைக்குப் பொருந்தியது அது.

அதற்கு மாறுபாடாக , எல்ஸ்மியர் மற்றும் டார்ஸி குடியிருப்பகங்கள் (Ellesmere and D’Arcy Residences) 'நாள் தொகை' ('per diem') செயல்திட்டங்களாகும் – அதாவது, நுழைவு தரப்பட்ட ஒவ்வொரு இளைஞர் பொருட்டும் அவரைக் குறித்தனுப்பும் முகமை அரசு நிர்ணயித்த 'நாள் கட்டணம்' கொடுக்கிறது. அதனால், குறித்தனுப்புதல் வழக்கமாக வருவது ஒவ்வொரு உள்ளூர் குழந்தை நல நியமனமிடமிருந்து; மெட்ரோ குழந்தை நலக் குழுமம், கத்தோலிக்கக் குழந்தை நலக் குழுமம், யூத குடும்ப மற்றும் குழந்தை சேவையகம், அல்லது டர்ஹம் குழந்தை நலம் (குழுமம்) (Metro Children’s Aid Society, Catholic Children’s Aid Society, Jewish Family & Child Services or Durham Children’s Aid).

## Treatment Approach
## மருத்துவப் பண்டுவ அணுகுமுறை

ஒவ்வொரு குடியிருப்புச் செயல் திட்டத்துடனும் சார்ந்த பல்வேறு அறிவியல் தொழில் நிபுணர்கள் நேரடி சேவைப் பணியாளருக்கு இணைந்து செயலாக்கம் புரிந்து, உடனடியாகக் கலந்தாலோசிக்கவும் ஆதரவு தரவும் கூடிய ஆதாரமாக இருப்பதற்காக வாரந்தோறும் ஒருங்கு கூடுவார்கள். அந்த நிபுணர்கள்; முனைப்பானப் பயிற்சி பெற்ற அறிவுரைப் பணியாளர்கள், முகமையைச் சார்ந்த மனவியல் வல்லுநர்களும் மனவியல் மருத்துவக் கருத்துரைஞரும், மற்றும் பல்வேறு வல்லுநர்களும்.

ஒருங்கிணைந்த சேவை அளிப்புக்கு இந்த முகவாண்மை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது என்பதால், அதனால் குடியிருப்புச் சிகிச்சை செயல் திட்டங்களில் கலந்துள்ள இளைஞரும் அவரது குடும்பத்தாரும் தேவையான மற்றும் பொருத்தமான முகமைச் செயல்திட்டங்களுக்கு முதன்மையான் நுழைவுரிமைப் பெறுவார்கள் – அதாவது, தனிப்பட்டோர் மற்றும் குடும்ப அறிவுரைப்பாடு, பெற்றோருக்கு அல்லது இளைஞருக்கு அல்லது சமூகப் பள்ளிகளில் பகல் சிகிச்சை வகுப்புகளுக்கென உருவாக்கப்பட்ட சீர்நலமளிப்புக் குழுவினர்.

சமநிலையானக் குழுவினர் இடையில் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் தேவையான இயல்திறம் வளப்படுத்தும் ஒரு வழிமுறையாகவும், ஒரே குடியிருப்பு சூழலில் சேர்ந்து வாழும் இளைஞருக்கு நிகழக்கூடிய எதிர்மறையான, சமூகவிரோதத் தொற்றுநோய்க் கேடுகளைக் கையாளுவதற்கு ஒரு வழியாகவும், வேறுபாடு மதிக்கப்படுகிறது என்பதை இந்த உள்ளடக்க நோக்கம் குறிக்கும்.

தொடர்ச்சியான பேணிப்பு என்பது இளைஞருக்கு ஓர் சிக்கல்மயமான விவகாரமாகும். அதனால், மருதுவமனை நுழைவையொட்டி விடுவிப்புத் திட்டம் வகுத்தல் தொடங்கி விடும். அத்துடன் சேர்ந்து, தனிப்பட்டோர் கடப்புநிலை சார்ந்த செயல்பாடுகள் செம்மைப்படுத்தப்படும். விடுவிப்புத் திட்டம் உட்படக்கூடியது; குடும்ப வீட்டுக்குத் திரும்புவது, ஒரு விதமான ஆதரவுதரும்

இடை நிலைக் குடியமைப்புக்குக் கடந்து செல்வது, முழுமைத் தன்னாண்மை அளித்தல், அல்லது முதிர்ந்தோர் சேவைகளுக்குக் குறித்தனுப்புகை செய்தல். அதன்படி, ஒவ்வொரு இளைஞரின் சூழ்நிலைக்கேற்ப அவர் தங்கி இருக்கும் காலம் வேறுபடலாம், ஒப்பந்தம் பேசப்படலாம்.

இளைஞரின் வாழ்க்கையில் குடும்பத்தார் வகிக்கும் பாங்கு இன்றியமையாதது என்பதால், பெற்றோர் மற்றும்/அல்லது முதல்நிலை காப்பு அளிப்போருக்கு, அவர்கள் சிகிச்சைக்கு ஏற்று வரும் ஆற்றல்கள், அக்கறைகள், மற்றும் நம்பிக்கைகளுக்கொப்ப அவர்களுடன் கூட்டாண்மை கொள்ள இயன்ற அளவுக்கு முயற்சியெடுக்கப்படும்.

சேவையளிக்க இடரார்ந்த, வழுப்படத்தக்க வாடிக்கையாளரான இளைஞருக்கு பேணிவளர்ப்புத் தரும் தன்மையுடைய ஓர் பாதுகாப்பான, எதிர்பார்ப்புக்கொத்த சுற்றுப்புறத்தை அமைப்பதற்காகவும், அத்துடன் சேர்ந்து நிகழக்கூடிய கேடுகளை செம்மையாகக் கையாளுவதற்கு வசதி செய்வதுக்காகவும், அன்றாட நடைமுறை ஒழுங்குகள் மிகக் கட்டுமானமாக அமைக்கப்படும்.

வளர்ச்சிநிலைக்கேற்ற அளவுக்கு தன்னாண்மையடைவதற்கான ஆயத்தம் செய்வதை வலியுறுத்தும்படி எல்லா செயல்திட்டங்களும் ஒன்றி அமைந்துள்ளன. அதனால், பள்ளி, பணி, அல்லது தொழில்பயிற்சி அளிக்கும் பொருத்தமான நாள் செயல் திட்டத்துக்கு செல்ல வேண்டும் என்று எல்லா குடியிருப்பாளரும் எதிர்பார்க்கபடுகிறார்கள். அது போல, மகிழ்ந்து பொழுது போக்கவும், பிறருடன் கூடிப் பழகவும், சமூகத்தில் ஆதரவாளர் அமைப்பை ஏற்படுத்தவும் உதவும்படி நேர்மறையான சமூக செயல்பாடு ஒன்றில் ஈடுபட எல்லா குடியிருப்பாளரும் மிகவும் ஊக்குவிக்கப் படுகிறார்கள்.

## Megan Transitional Unit
## மேகன் இடைநிலை அலகு

16 முதல் 25 வயது வரை உள்ள இளம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மேகன் கடப்புநிலை அலகு இடை அமைதி, சமநிலை இருப்பு, மற்றும் நோய்தடை செயல்முறைகள் அளிக்கிறது. அது, மேகன் குடியிருப்பிடத்தின் கீழ் பகுதியில் மேற்பார்வையுடைய ஒரு குறைவான அளவு கிளர்ச்சியூட்டும், தன்னமைப்பான தனிவிடுதியில் இரண்டு படுக்கைகள் இயக்குகிறது. வாடிக்கையாளர் அமைப்பு குறுகிய கால அளவில், பெருமளவு மூன்று மாதம் தங்கும்படி உள்ளது.

## Apartment & Program
## தனியறையும் பணித்திட்டமும்

மேகன் விடுதிக்கு பின்புறம் தனிப்பட்ட நுழைவு உள்ளது. இரண்டு தனிப்பட்டப் படுக்கையறைகளுடன், ஒரு சிறு வரவேற்பறை, பொழிவுத்தண்ணீர் (shower) அமைந்த குளிப்பறை, மற்றும் சிறிய மின்அடுப்பும் (hotplate) நுண்ணலை அடுப்பும் (microwave) கொண்ட சமையலறையும் அதில் உள்ளது. மேலும், வரவேற்பறைக்கு அருகில் ஓர் அலுவலறை உணடு – அது இந்த செயல்திட்டதுக்கு ஏற்கப்பட்ட நபர்களுக்கு ஆதரவு கொடுக்கவே சிறப்பாக பணியில் அமர்த்தப்பட்டப் பணியாளருக்குத் தகுந்த வேலைத்தலம்.

குறித்தனுப்புகை செய்த முகவராலும், மற்றும் மேகன் மேற்பார்வையாளர் அல்லது அவரால் நியமனம் செய்யப்பட்டவராலும், தனிப்பட்ட முறையில், சம்மந்தப்பட்ட நபரின் தேவைகளுக்கேற்ப, செயல்திட்டம் வகுக்கப் படுகிறது.

**Expenses**
**செலவினம்**

அன்றாட வாழ்க்கை செலவுகள், ஒவ்வொரு தனி நபரின் தேவைப்படி வேலையில் அமர்த்தப்பட்ட பணியாளருக்கான செலவு உட்பட, குறித்தனுப்புகை செய்த முகவரின் பொறுப்பாகும். இதன் பொருட்டு உருவாக்கப்பட்ட ஒரு நிலை ஒப்பந்தப் பத்திரத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட செலவுகள் அனுமதிக்கப் படுவதற்குமுன் ஒப்பந்தம் பேசி திட்டவட்டமாக விதிக்கப்படுகின்றன.

**Staffing**
**பணியாளர் அமர்த்துதல்**

பணியாளர் அமர்த்துதல், செயல்திட்டம் வகுத்தல், பாதுகாப்பு, காப்புறுதி, அனைத்தும் குடியிருப்பாளரின் தேவைகளுக்கேற்ப முடிவு செய்யப்படும்.மேகன் குழுவின் முழு–நேரப் பணியாளர்கள் வாடிக்கையாக தலத்தைக் கண்காணிப்பார்கள். எனினும், தனிப்பட்ட ஒவ்வொரு குறிப்பின் அடிப்படையில் பணியாற்ற ஒப்பந்தமிட்டு அமர்த்தப்பட்ட அலுவலகர் நடப்புநிலை செயல்திட்டங்கள் அனைத்தையும் செயல்முறைப்படுத்த வசதி செய்து தருவார். எல்லா நோயாளர் குறிப்பும் மேலாண்மை செய்வது குறித்தனுப்புகை செய்த முகவர் அல்லது ஒப்பந்தப் பணியாளரின் பொறுப்பாகும்.

குறிப்புக் கோப்பைப் பரிமாறுதல் செய்தல், செயல்திட்டக் கால அட்டவணையை ஒருங்கிணைப்பு செய்தல், நேரடிசேவைப் பணியாளரை மேற்பார்வையிடுதல், மருத்துவ நடைமுறை சார்ந்த மாநாடுகளை ஒழுங்குபடுத்துதல், ஆகியவற்றை மேகம் குடியிருப்புக் குழாம் செய்யும். ஏற்கப்பட்டு ஏறத்தாழ 30 நாட்களுக்குப் பின் சேவைகளும் விளைவுகளும் சீராய்வு செய்ய ஏற்பாடு செய்யப்படும். அப்போது எல்லா தரப்பினரும் அந்த அமைப்பு நிலையின் கால அளவைப் பற்றி முடிவெடுப்பார்கள். முதல் ஆறு வாரங்களுக்கு மேல் தங்குவதென்றால், அதற்கு ஒரு தெளிவான வெளிச்செல்லும் செயல்திட்டம் நிறுவப்பட வேண்டும்.

**Admissions**
**ஏற்கப்படுதல்**

ஏற்பு அனைத்தும் நடைமுறையான வேலை நேரங்களில் திட்டமிடப்பட வேண்டும், அத்துடன் தன்னிச்சையானதாக இருக்க வேண்டும்.

குறிப்பிடத்தக்க அள்வு கேடு நிகழக்கூடியதாகத் தோன்றும் குறிப்பனுப்புகை எதற்கும் மறுப்புரிமையை EMYS வெளிப்படையாக ஒதுக்கி வைத்துள்ளது.

## Referral Sources
## குறித்தனுப்புகை ஆதாரங்கள்

பற்பல சமூகக் கூட்டாண்மையாளருடன் EMYS முன்பே ஒப்பந்தமுறையில் உடன்பாடுகள் செய்துள்ளது. அதன்படி, மருத்துவ மனைகள், குழந்தை நல நியமனங்கள், தனிப்பட்ட முகவாண்மைகள், மற்றும் முதிர்ந்தவர் மனநல சேவையகங்கள் உட்பட, வேறுபட்ட பிரிவுகளைச் சார்ந்த குறித்தனுப்புகை முகவரிடமிருந்து வந்த குறித்தனுப்பல்களை நல்விளைவளிக்கும் வகையில் ஏற்றுள்ளது.

விசாரணைகளை குடியிருப்புச் செயல்திட்ட மேலாளருக்குக் குறித்தனுப்பவும்

**Violence Intervention Project**
**வன்முறைத் தலையீடு செயல்திட்டம்**

நம் சமூகத்தின் மாறி மாறி வரும் தேகளை நிறைவு செய்யப் புதிய வழிகளை கிழக்கு மெட்ரோவில் நாங்கள் தொடர்ச்சியாகத் தேடுகிறோம். அதனால், 1997-ம் ஆண்டில் தம் சமூக சுற்றுப்புறத்தில் வன்முறை நடப்பதைப் பற்றி வருந்தும் ஓர் இளைஞர் குழு எங்களை அணுகியபோது, அவர்களின் கருத்துக்களைக் கேட்க அக்கறை காட்டினோம். சமூக பாதுகாப்புப் பற்றி பேச்சளவில் இருப்பதில் சோர்வுகண்டு, அதைப்பற்றி நடவடிக்கையெடுக்க விரும்பினார்கள்.

அந்த விருப்புக்கேற்ப, வன்முறைத் தடைச் செயல்திட்டம் (VIP) உருவாகியது.

பள்ளி மற்றும் சமூகப் பாதுகாப்பை வளர்ப்பதற்கான அவர்களுடைய கருத்துக்கள், ஊக்கம், தீர்வுகளை எல்லாம் பங்களிக்க இளைஞர்களுக்கு செயலூக்கம் எழுப்பவும் செய்திறன் அளிக்கவும் அமைந்த செயல்திட்டமாகும் VIP. அமைதியான முறையில் முறண்பாடுகள் தீர்க்கும் திறன்களை அவர்களுக்கு அளிப்பதுடன், அவர்கள் சுற்றுப்புறத்தில் நல்லுறுதியான மாற்றங்களை அவர்கள் உண்டாக்க அது இயல்விக்கிறது.

VIP-இன் எல்லாக் கூறுகளிலும் இந்த இளைஞர் கலந்துகொள்கின்றனர். அவர்கள் சமூக பாதுகாப்பு ஆய்வுஅளவைகளை நடத்துகிறார்கள், மற்ற இளைஞருக்கு வன்முறை எதிரப்பு செயலரங்குகளை தலைமைதாங்கி இயக்குகிறார்கள், வலைத்தளத்துக்குப் பங்கேற்கிறார்கள், மற்றும், செயல்திட்ட அறிவுரைக் குழுவில் உறுப்பினராகப் பணியாற்றுகிறார்கள்.

VIP கீழ்கண்ட சேவைகள் உள்ளடங்கியது;

**Violence Prevention Services in the School and Community**
**பள்ளியிலும் சமூகத்திலும் வன்முறைத் தடை சேவைகள்**

பள்ளி மற்றும் சமூக அமைப்புகளில் தனிப்பட்டோர் முறையில் வனமுறைத் தடுப்பு செயல்திட்டங்கள் VIP அளிக்கிறது. ஒரு வேளை இயங்கும் செயலரங்கு முதல், பள்ளிசமூகம் அனைத்தையும் உள்ளாக்கும் நெடுங்கால, முனைப்பியலான தலையிடுச்செயல்முறைகள் போன்ற வேறுபட்ட சேவைகளை அளிக்கிறது. இந்த சேவைகளுக்கு ஓர் உதாரணமாக, வெளியேற்றப்பட்ட மாணவர்கள் செயல் திட்டம் (Expelled Students Program - ESP) அவர்களுக்குத் தடுப்புப் பாடத்திட்டம் அளிக்கிறது – பள்ளி அமைப்பிலிருந்து முழுமையாக வெளியேற்றப்பட்ட இளைஞருக்கு கல்விசார்ந்த செயல்முறையும் சிகிச்சையும் ESP அளிக்கிறது.

**Youth Volunteer Program**
**இளைஞர் தொண்டர் பணித்திட்டம்**

ஒவ்வொரு ஆண்டும் பல இளைஞர் வன்முறை தடுப்புப் பணித்திட்டத்தில் தொண்டராகப் பணிபுரிய முன்வருகிறார்கள். அவர்களது பங்களிப்பு உட்படுவது; பள்ளி மற்றும் சமூக அமைப்புகளில் வன்முறைத் தடுப்பு செயலரங்குகளில் தலைமையேற்று நடத்துவது, மாநா

டுகளில் VIP சார்பில் கலந்து கொள்வது, வன்முறை விவகாரங்கள் சார்ந்து தகவல் நிலையங்களுடன் கலந்து பணியாற்றுவது, இந்த செயல் திட்டத்தின் வலைத்தளத்தை வளர்க்கச் செய்வது, மற்றும், நிதி திரட்டுதல்.

**Consultation and Training for the Professional**
**கலைத்தொழிலருக்குக் கலந்தறிதலும் பயிற்சியும் அளித்தல்**

தம் பள்ளிகளிலும் நிறுவனங்களிலும் வன்முறைத் தடுப்புக் கையாளுத்திறம் திட்டங்களை உருவாக்கவும் செயல்படுத்தவும் கருதும் கல்வி கற்பிப்போருக்கும் மற்ற தொழில் வல்லுநருக்கும், சேவைக்குக் கட்டண அடிப்படையில், இந்தத் துறையில் தலையாயது எனக் கருதப்படும் வன்முறைத் தடைச் செயல்திட்டம் பயிற்சியும் கருத்தறிவுரையும் அளிக்கிறது.

வன்முறைத் தடைப் பணித்திட்டப் பணியாளர் மேலும் அளித்திருப்பது;

- வடக்கு ஒன்டேரியோவில் முதல் குடிமக்கள் (First Nations) சமூகப் பணியாளருக்கு ஒடுக்கல்வன்மைத் தடுப்புப் பயிற்சி அளித்தல்,
- டர்ஹாம் மண்டலத்திலுள்ள பல உயர்நிலைப்பள்ளிகளில் பள்ளித்தலத்தில் அமைந்த வன்முறைத்தடுப்புச் செயல்திட்டங்களை செயல்படுத்தி டர்ஹாம் குடும்ப நீதிமன்றத்துக்கு ஆதரவு அளித்தல், மற்றும்,
- சேஃப்கார்ட்ஸ் (Safeguards) என்னும் செயல்திட்டத்துடன் இணைந்த பற்பல நிறுவனங்களின் நூற்றுக்கணக்கான பணியாளர்களுக்கு, ஒடுக்கல்வன்மை (Bullying), கணினி ஒடுக்கல்வன்மை (Cyber-bullying), மற்றும் இளைஞர் ஈடுபாடு (Youth Engagement) ஆகியவற்றில் பயிற்சி அளித்தல்

எவ்வாறு நாங்கள் வன்முறைத் தடைச் செயல்திட்டத்தை உங்கள் தலத்துக்குக் கொண்டுவரலாம் என்பது குறித்து மேலும் அறிய; செயல்திட்ட மேலாளரை கீழ்கண்டவாறு அணுகுக;
Program Manager, Leigh Moore at lmoore@emys.on.ca or by phone at 416-438-3697 ext:  242

## Developmental Services
## வளர்ச்சிசார்ந்த சேவைகள்

வளர்ச்சியில் காலத்தாழ்வு நிலையில் உள்ளவர் என்று நோய்அறிதல் முறையில் நிர்ணயிக்கப்பட்டு, நடத்தைமுறை, உணர்ச்சிநிலை,சமூக அமைப்பு, அல்லது மனநலம் ஆகிய நிலைமைகளில் கிளர்ச்சி காணும் 12 முதல் 24 வயது வரையுள்ள நபர்களுக்கு பலவிதமான சேவைகளை அளிக்கிறோம்.

எங்கள் சேவைகளின் எண்ணிக்கையளவில் வேறுபாடு இருக்கலாம் – அது வருடத்தின் காலநேரம், சமூகக்கோரிக்கைகளின் எண்ணிக்கை, மற்றும் எங்களுக்குக் கிடைக்கக்கூடிய நிதித்தொகை, ஆகியவற்றைப் பொருத்தது. ஆயினும், ஒரு பாதுகாப்பான, தூண்டிஎழுப்பும் கல்விகற்கும் சூழலில், இளைஞருக்கும் இளம்முதிர்ச்சி அடைந்தோருக்கும் தோழமைக்கூடுதல், மற்றும் வாழ்முறை சார்ந்தத் திறன்களை வளர்க்கும் கற்பனைத்திறம் விளங்கும் கல்விச் செயல்முறைகளை எப்போதும் அளிக்கிறோம்.

## Galloway After School Program (GASP)
## காலோவே பிற்பள்ளிப் பணித்திட்டம்

வளர்ச்சி சுணக்கம் கொண்ட இளைஞர்கள் சமூகத் தொடர்பிலும் வாழ்முறையிலும் வரம்புடைத் திறன்கள் அமைந்தவராக காணப்படலாம். சொல்லால் தம் கருத்துக்களை வெளிப்படுத்துவதில் உள்ள இடறபாடு, அவர்கள் தம் உடன்சேர்ந்தோருடன் கூட்டாடுதலில் பாதிப்பு உண்டாக்கும். அதனால் அவர்களுக்கு மிகக்குறைவான கூட்டாளரும் ஒதுக்கல் நிலை உணர்ச்சியும் அமையும்.

காலோவே பிற்பள்ளிப் பணித்திட்டம் அவர்களுடைய தனிப்பட்டத் தேவைகளுக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய சமூகத் தொடர்பு மற்றும் வாழ்முறைத் திறன்களை மேம்பாடு செய்யும்படியாக வடிக்கப்பட்டது. அவர்களுடையத் தன்னாண்மை வளருவதற்குத் தேவையானத் திறன்களைக் கற்க இயல்விக்கும்படியாக, பாதுகாப்பான, கட்டுமானமான, மற்றும் மகிழ்ந்து பொழுதுபோக்கும் சூழலை அது அளிக்கிறது. கூட்டுறவு, பொறுப்பு, சாதனை சார்ந்த உணர்ச்சி எழுப்பும் குறிக்கோளுடன் செயல்பாடுகளும் புறப்பாடுகளும் வகுக்கப்பட்டுள்ளன. வாழ்முறைப் பொருட்பாடுகள் உட்படுவது; சமையல். ஓய்வுப் பொழுதுத் திட்டமிடல், தெருக் காப்பமைப்பு முறை,பால்சார்ந்தது, மற்றும், உறவுத்தொடர்பு வளர்த்தல்.

## Program Structure
## செயல்பாடு கட்டமைப்பு

குறைவான அல்லது மிதமான அளவுக்கு வளர்ச்சி தாழ்ந்தவர் என மருத்துவநிர்ணயம் செய்யப்பட்ட வளரிளைஞருக்கென அமைக்கப்பட்ட தோழமைக்கூட்டுத் திறம், வாழ்முறைத் திறம், மற்றும் செயல்பாடுகள் சார்ந்தது காலோவே பிற்பள்ளி செயல்திட்டம். அவர்களுடை சமூகத் தோழமை மற்றும் வாழ்வுத்திறன் வளர்ச்சிகுத் தேவையானது ஓர் கூட்டாளர்குழுசேரும் அனுபவம். பள்ளிநிகழும் ஆண்டுப்பகுதியில் இந்த செயல்திட்டம் வாரம் இரண்டு பிற்பகல்களில் இயங்குகிறது – ஏறத்தாழ வாரம் ஏழு மணி நேரம். பணியாளரமைப்பு விகிதம் மூன்று இளைஞருக்கு ஒரு பணியாளர். இந்த செயல்திட்டத்தின் கால அளவோ பணியாளர் அமைப்போ தரம் குறையாதிருப்பதை மாதம் $35 கட்டணம் உறுதிப்படுத்துகிறது.

**Time for the Taking**
நேரம் எடுத்துக் கொள்ளுதல்

**நீங்கள் 12 முதல் 24 வயது வரை உள்ள வளர்ச்சி சுணக்கம் கொண்ட இளைஞரின் பெற்றோர் அல்லது காப்பாளரா ? தகுதியுடைய பெற்றோர் இடருறுதிப் பணியாளரைக் கண்டுபிடிப்பதோ தொடர்ந்து அமர்த்துவதோ உங்களுக்கு சிறமமாக இருக்கிறதா ? *நீங்கள் வீட்டில் சிறப்பு சேவைகள் நிதி* பெறுகிறீர்களா ?**

மற்ற எல்லோரையும் போல, வளர்ச்சி சுணக்கம் கொண்ட இளைஞரின் பெற்றோரும் காப்பாளரும் சில நேரங்களில் தமக்கென ஓய்வு நேரம் தேவைப் படுவார்கள் – பல்வகை சிறுபணிகள் செய்வது, கூட்டங்களுக்குச் செல்வது, அல்லது சிறிது நேரம் அமைதியாக இருத்தல், ஆகியவற்றுக்கு. உங்களுக்கென்று நேரம் எடுத்துக்கொள்ளத் தேவைப்படும்போது, கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகம் **நேரம் எடுத்துக் கொள்ளுதல்** என்னும் செயல்திட்டத்தின் வழியாக உங்களுக்கு உதவ முடியும். நீங்கள் உங்களுக்கென நேரம் எ டுத்துக்கொள்ளும்போது, உங்கள் மக்கள் எங்கள் பணியாளருடனும் வேறு ஒன்பது டீன்கள் அல்லது முதிர்ந்தவருடன் மகிழ்ந்து பொழுது போக்குதலிலும் கற்றலிலும் நேரம் போக்கலாம். காலோவே சென்டரிலிருந்து செயலாற்றும் **நேரம் எடுத்துக் கொள்ளுதல்** சமூகப்புழக்கம் மற்றும் வாழ்வுத்திறம் வளரவும் மிகைப்படுத்தவும் வடிக்கப்பட்ட செயல்முறைகளை அளிப்பார்கள்.உங்கள் மக்கள் கணினித் திறன்கள் கூடப் பெறலாம்!

**நேரம் எடுத்துக் கொள்ளுதல்** நெகிழ்வுடையது. உங்களுக்கு உதவி தேவைப்படும் என்று அறிந்தால் முன்கூட்டியே நடைவேளையை ஒதுக்கி வைக்கலாம். அல்லது, எதிர்பாராத நிலைகள் நேரும்போது தற்செயலாகப் பதிவு செய்யலாம். நுழைவிடம் இருந்தால், உங்கள் மக்கள் வரவேற்கப்படுவார். இப்போதைக்கு, **நேரம் எடுத்துக் கொள்ளுதல்** வார இறுதிகளில் மட்டுமே செயல்படும். ஆனால், நாங்கள் விரைவில் வாரநாட்களில் மாலையிலும் செயல்பாடு நடத்தலாம். கவனிப்பாகக் காத்திருங்கள்!

நீங்கள் பதிவு செய்து உறுப்பினரானதும், உங்களுக்கும் உங்கள் மக்களுக்கும் செயல்படும் ஓர் கால அட்டவணையை ஒரு EMYS பணியாளரின் துணை கொண்டு அமைக்கலாம். அதற்கு ஒருமுறை மட்டுமேயான பதிவுக் கட்டணம் $20. நடைவேளை ஒவ்வொன்றும் மூன்றரை மணி நேரம் நீடிக்கும், ஒவ்வொன்றுக்கும் $40 விலை தர வேண்டும். ஐந்து, பத்து, அல்லது இருபது நடைவேளைகள் அமைந்த கட்டுகள் தள்ளுபடி விலையில் கிடைக்கும். ஒவ்வொரு நடைவேளையிலும் பெருமளவு பத்து பங்குபெறுவோர் தான் ஏற்கப்படுவார். அதனால் ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான அளவு கவனம் பெறுவார்.

Program Costs
**செயல்திட்ட செலவு**

| | | |
|---|---|---|
| 1 நடைவேளை | – $40 | |
| 2 நடைவேளை | – $80 | |
| 5 நடைவேளை | – $195 – | $5 தள்ளுபடி |
| 10 நடைவேளை | – $375 – | $25 தள்ளுபடி |
| 20 நடைவேளை | – $700 – | $100 தள்ளுபடி |

மேல்விவரங்களுக்கு தொடர்பு கொள்க;
Deborah Kernohan **dkernohan@emys.on.ca** directly at 416-438-3697 ext: 259.

**Volunteer**
**தொண்டர்**

கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகம் (EMYS) நம்புவது; எமது முகமையுடன் தமது நேரம், தேர்ச்சி, செயல் திறம் ஆகியவற்றை பங்குகொள்ள ஒப்புகின்ற வண்மை மனமுடைய தொண்டர்களுடன் கூட்டாண்மை கொண்டு 'இடர்நிலையில்' உள்ள இளைஞர்களுக்கு ஆதரவு தருவது முக்கியம்.

EMYS–இன் தொண்டர் செயல்திட்டம் பற்பல நிரலான தொண்டர் அமைப்புகள் அளிக்கிறது. தமது நேரமும் திறன்களையும் நன்கொடை செய்வதால், நமது இளைஞருக்கும் அவர்கள் குடும்பத்தாருக்கும் தேவைப்பட்ட மனநல சேவைகளுக்கு ஓர் இன்றியமையாத பங்களிப்புக் கொடுக்கிறார்கள். கற்பதற்கும் ஸ்கார்பரோ சமுதாயத்துக்கு சேவை செய்வதற்கும் எமது தொண்டர்களுக்கு வாய்ப்புகள் அளிப்பதற்கு EMYS பொறுப்பேற்றுள்ளது

பின்வரும் வழிகளில் நீங்கள் தொண்டு செய்ய முன்வரலாம்;

## Corporate, Faith Community and Service Clubs Volunteer Opportunities
## வணிக இணையம், சமய வழிபாடு சமூகம், மற்றும் சமூக சேவைபுரியும் தனிக்குழு ஆனவைச் சார்ந்த தொண்டர் வாய்ப்புகள்

தொண்டு செய்வதால் மூன்று வழிகளில் வெற்றி காணலாம்! உங்கள் பணியாளர் அளிக்கும் உதவியால் நமது சமூக இளைஞரும் குடும்பங்களும் பயன் பெறுகிறார்கள். தாம் அடையும் புதிய செயல்திறன்களும் அனுபவங்களும் உங்கள் பணியாளர்கள் மேம்பாட்டுஒளியுடன் நலன்களும் அடைய வாய்ப்பளிக்கின்றன. அவர்களது சமூகத் தொண்டுகளின் வழியாக உங்கள் பணியாளர்கள் கொண்டு வரும் கூடுதல் நல்லுறுதியான புகழுருவினால் உங்கள் நிறுமம் பயன்பெறுகிறது.

சில தொண்டர்கள் எங்கள் முகமையுடன் தொடர்ச்சியாக உட்பட விருப்பேற்கிறார்கள். பிறர் அவ்வப்போது வந்து, ஒரு–முறை நிகழ்ச்சிகளில் கலந்துதவுகிறார்கள். உதாரணமாக, இளவேனிற்காலதில் ஒரு நாழ் வந்து எங்களுடன் தோட்டவேலை செய்யலாம், அல்லது ஒரு அறையை சாயம்பூச வரலாம், அல்லது நிதிதிரட்டும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துதவலாம். எங்கள் தொண்டர்கள் பல்வேறு முறைகளில் பங்குகொண்டு உதவுவதை நாங்கள் மிகவும் மதிக்கிறோம்.

## Youth Volunteer Opportunities
## இளைஞர் தொண்டு செய்யும் வாய்ப்புகள்
நமது சமூக இளைஞர்கள் மற்ற இளைஞருக்கு உதவி புரிவதால் பயன் பெறுகிறார்கள். உங்களுக்கு எதிலாவது பற்று உண்டா, ஓர் பொழுதுபோக்கு வேலை, அல்லது உங்கள் சமநிலையாருடன் கூடி உழைத்து உங்கள் சுற்றுப்புறத்தில் சம்மந்தப்பட்டு பயன் திருப்பித் தர விருப்பம் உண்டா?

கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகம் இளைஞர் தொண்டுசெய்தலை ஊக்குவிக்கிறது. பெரும்பாலானத் தொண்டர்கள் எங்கள் வன்முறைத் தடை செயல்திட்டதில் கலந்துகொள்வதை விரும்புகிறார்கள்.

## Adult Volunteer Opportunities
## முதியோர் தொண்டு செய்யும் வாய்ப்புகள்
எங்கள் தொண்டர்கள் நாம் சேவையளிக்கும் இளைஞர்களுக்கும் குடும்பங்களுக்கும் ஒரு இன்றியமையாத பங்களிக்கிறார்கள். தொண்டர்கள் புரியும் சில சேவைகள்; எங்கள் இயக்குநர்

குழுமத்தில் அமர்வது; இளஞருடனும் பெற்றோருடனும் நேரடியாக வேலை செய்து எங்கள் சேவைகளை நீட்சி செய்து வளப்படுத்துதல்; மற்றும், நிர்வாகம் அல்லது நிதிதிரட்டலுக்கு ஆதரவு தருதல்.

## How to join the team
## எப்படி எங்கள் கூட்டணியில் சேருவது

1. முகமைத் தொண்டர் ஒத்திசைப்பாளருடன் தொடர்பு கொண்டு நீங்கள் தொண்டு செய்ய விருபுகிரீர்கள் என்று தெரிவிக்கவும்(416-438-3697)
2. ஆண்டுக்கு மூன்று முறை நிகழும் புத்தறிவுப் பயிற்சியில் இரண்டு நடைவேளைகளில் கலந்து கொள்ளுங்கள், அல்லது தொண்டர் ஒத்திசைப்பாளர் நடத்தும் ஒரு தனிப்பட்ட நேர்காணும் கேள்வித் தொடர்புக்கு வரவும்.
3. கேட்பாளர் மூவரைக் குறிக்கவும்.
4. காவல் குறிப்பு சரிபார்ப்பு (CPIC) தடைநீக்கத்துக்கு இசையவும், முகமை செலவில
5. தொண்டு செய்யும் வாய்ப்பையும் உங்கள் பற்று மற்றும் திறன்களையும் ஈடாக்கவும்
6. தொண்டு செய்யத் தொடங்கவும்!

## In accepting volunteers, E.M.Y.S. makes a commitment:
## தொண்டர்களை ஏற்றுக்கொள்வதில் EMYS ஒரு பொறுப்பேற்பு செய்கிறது;

--அடிப்படைப் பயிற்சியும் அறிவுறுத்துதலும் அளிப்பது. அத்துடன், பொருந்தும்போது, பணியாளர் சந்திப்புகள், நபர்களின் விவகாரக் குறிப்புகள் சார்ந்த உரையாடல்களும் ஆலோசகம் பெறுதலும், தொழில் திறன் வளர்ச்சி கூட்டத் தொடர்வு, ஆகியவற்றில் கலந்துகொள்ளும் வாய்ப்பு அளித்தலும்.
--தனிப்பட்டத் தொண்டரின் அறிவு, திறன்கள், வாழ்க்கை அனுபவங்கள், ஆகியவற்றின் அளவுக்குத் தக்கவாறு அவருக்குப் பணிகள் அளிப்பது, குறிப்பாக அவரது அமைப்பு ஆரம்பக் கட்டத்தில்.
--தொண்டர் கண்காணிப்பு ஓர் திட்டமிட்டக் கல்வி செய்முறை என்பதை உணர்ந்து அனுசரிப்பது.
--தொண்டருக்கும் மேற்பார்வையாளருக்கும் இடையே உள்ள உறவுத்தொடர்பில் அறிவுரையும் பொறுப்பேற்பும் உள்ளடங்கியுத் தன்மைகள் என்பதை உறுதிப்படுத்துவது. இருசார்பாளரும் ஏற்றுக்கொண்ட குறிக்கோள்களும், மேற்பார்வையிடும் செயல்முறையில் கலந்துகொள்ளும் பொறுப்பு இருதரப்பினருக்கும் உண்டு என்பதும் அந்த உறவின் கட்டமைப்பு.

## To secure and retain an E.M.Y.S. volunteer placement position, volunteers are expected to commit as follows:
## EMYS தொண்டர் அமைப்பு நிலையைப் பெறவும் தொடரவும், தொண்டர்கள் கீழ்க்கண்டவாறு பொறுப்பேற்பு செய்ய வேண்டும்;

நிலையத்தின் ஒழுக்கமுறை தொகுப்புச் சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.
ஒரு குறிப்பிட்ட தொண்டர்வேலை செய்வதற்குப் பொறுப்பேற்பதற்கு முன், தொண்டர் தம் ஆற்றல்நிலையையும் அவர் ஆங்கிருக்க முடியுமா என்பதையும் உண்மைநிலையறிந்து முடிவு செய்ய வேண்டும்.
அவரது ஏற்றுக்கொண்ட பொறுப்பை நம்பகமாகவும் பொறுப்பான முறையிலும் தொடர்ந்து செய்ய வேண்டும்.
முகமைப் பணியாளர், மாணவர், தொண்டர் அனைவருக்கும் ஒருந்தக் கூடியப் பணியாளர் கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் அனுசரித்து நடக்க வேண்டும்.

**How to Make a Donation**
**எவ்வாறு நன்கொடை அளிப்பது**

குழந்தைகள் நமது எதிர்காலம், நம்முடைய இன்றியமையாத சொத்து, என்பதை நம்மில் பெரும்பாலானோர் ஒப்புகிறோம்.

எனினும், அதிகப்படியான சந்தர்ப்பங்களில் அவர்கள் தவறி விழுகிறார்கள், பொதுமக்களின் முக்கிய நிரலில் இருந்து நீக்கப்படுகிறார்கள்.

கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகத்தில் நாங்கள் வழுப்படத்தக்க, இடற்ப்பாடு அமைந்த இளைஞருக்கு முக்கியமான சேவைகள் செய்கிறோம்.

எனினும், முழுமையான நிதி ஆதாரங்கள் இல்லாமலும், தேவைக்கோரிக்கைகள் வளர்ந்துகொண்டே இருக்கும் நிலையிலும், இதை செய்கிறோம்.

இக்காரனம் கொண்டு, எங்கள் முகவாண்மைக்கு நீங்கள் ஒரு நன்கொடை அளிப்பது பற்றி கருதும்படி கோருகிறோம்.

பணம், மற்றும் 'பொருள்' முறையில் பண்டங்களும் சேவைகளும் நன்கொடையாக அளிப்பதை மதித்துப் பாராட்டுகிறோம்.

எப்படி நீங்கள் நன்கொடை ஈய முடியும் என்பது பற்றி அறிய, எங்களை தொலைபேசியில் அழைக்கவும் (416-438-3697) அல்லது மின் அஞ்சல் தொடர்பு கொள்ளவும் emys@emys.on.ca

***உங்கள் உதவியுடன் நாங்கள் பிறருக்கு உதவ முடியும்.***

**School-based Prevention and Diversion Project**
**பள்ளி–அமைப்பில் தடுப்பு மற்றும் திசைமாற்றல் செயல்திட்டம்**

கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகம் (EMYS), தம் பள்ளி–அமைப்பில் தடுப்பு மற்றும் திசைமாற்றல் செயல் திட்டத்தின் வழியாக, சர் வின்ஸ்டன் சர்ச்சில் உயர்நிலைப் பள்ளியில் (Sir Winston Churchill Collegiate) மூன்று முக்கியமானக் குறிக்கோள்களைச் சாதிக்க முயலுகிறது. எங்கள் நல்விளைவளிக்கும் அறிவுரையளித்தலும் செயலரங்குகளும் இடர்நிலையிலுள்ள இளைஞர், பள்ளியிலிருந்து தற்காலிக நிறுத்தல் அல்லது வெளியேற்றம் தவிர்க்க உதவுகின்றன. மேலும், அவை பள்ளியினரின் முரண்பாடு கையாளும் திறனை மேம்பாடு செய்கின்றன. அத்துடன், நீதிமுறை அமைப்புக்குச் செல்லும் இளைஞரின் எண்ணிக்கையைக் குறைப்போம்.

இந்த செறிவானத்–தேவை அமைந்தப் பள்ளியில் எங்கள் பள்ளி–அமைப்பில் தடுப்பு மற்றும் திசைமாற்றல் செயல் திட்டத்தை இயக்குவதற்கு, எங்கள் வன்முறைத் தடுப்புச் செயல்திட்டம் (VIP) மேற்கு ஸ்கார்பொரோ அயல்பக்க சமூக நிலையத்துடன் கூட்டாண்மையாக இயங்குகிறது. குழந்தை மற்றும் இளைஞர் சேவைகள் அமைச்சகமும் இளைஞர் நீதி சேவைகள் அமைச்சகமும் நிதியளிக்கும் இந்த மாநிலத்தின் பரப்பில் அமைந்துள்ள ஆறு முன்னோடித் திட்டங்களில் ஒன்றாகிய இந்த செயல்திட்டத்தை நடத்துவது குறித்து நாங்கள் பெருமைப்படுகிறோம்.

குற்றம் செய்துள்ள – அல்லது குற்றம் செய்யக்கூடிய இடர்நிலையில் உள்ள – குறித்தனுப்புகை செய்யப்பட்ட நபர்களுடன் அவர்களுடையப் பள்ளி அமைப்பில் சேர்ந்து உழைத்து அவர்களுக்குப் பயனளிக்கிறது. பள்ளி மற்றும் சமூக வாய்ப்புவளங்கள் உள்ளடங்கிய செயல்திட்டம் ஒன்றை உருவாக்குவதில் ஒவ்வொரு இளஞரும் பங்கு கொள்வார்.

சமநிலையினர் தலைமையில் நடத்தப்படும் பயிற்சி முறை, மற்றும் ஓடுக்கல் வன்மை, ஆண்–பெண் சந்திப்பு வன்முறை, தீயோர்கூட்ட வன்முறை, முரண்பாடுத் தீர்வு (bullying, dating violence, gang violence and conflict resolution) ஆகிய முரண்விவகாரங்களைச் சார்ந்த செயலரங்குகள் – இவை போன்ற வன்முறைத் தடுப்பு முன்னியக்கச் செயல்பாடுகள் வழியாக இந்தச் செயல்திட்டம் பள்ளி மக்கள்தொகை அனைத்துக்கும் பயன்படும்.

**Expelled Students Program**
**வெளியேற்றப்பட்ட மாணவர் பணித்திட்டம்**

**Program Function**
**செயல்திட்ட செயலாற்றுமுறை**

ஒன்டேரியோவின் பள்ளியொன்றிலிருந்து முழுமையாக வெளியேற்றப்பட்ட இளைஞருக்கு இந்த வெளியேற்றப்பட்ட மாணவர் செயல்திட்டம் சிகிச்சைமுறையும் கல்வி செயல்பாடும் அளிக்கிறது. நல்விளைவளிக்கும் வகையில் பள்ளி அமைப்பில் அல்லது பணியாளர் தொகுதியில் மாணவரை மறுஒருங்கிணைப்பதே இந்த செயல்திட்டத்தின் குறிக்கோள்.

**Treatment Approach**
**மருத்துவப் பண்டுவம் அணுகுமுறை**

குறிப்பிட்ட எந்த நேரத்திலும், பெருமளவு 20 மாணவர் வெளியேற்றப்பட்ட இளைஞர் செயல்திட்டத்தில் இருப்பார்கள். கல்வி, மனநிலை அறிவியல், மனநல மருத்துவ அறிவியல், சமூக சேவை, குழந்தை மற்றும் இளைஞர் சேவை, ஆகிய அறிவியல் துறைகளைச் சார்ந்த தொழில்வல்லுநர் குழுவின் சேவைகள் கொண்டு இந்த மாணவர்கள் பயனடைவார்கள்.

மாணவர்களின் செயல்திட்டங்கள் தனிப்பட்டோர்க்கேற்ப வகுக்கப்பட்டு, கீழ்க்கண்டன இணைக்கப்பட்டுள்ளன;

- பல்கலைக் கல்வி கற்பித்தல்
- கூட்டுறவுப் பயிற்சிக்கல்வித் தேர்வுமதிப்பெண் பெறும் செயல்திட்டம் (co-operative education credit program)
- மனநலச்சமூகவியல் ஆதரவு
- சமூக உறவுத் தொடர்பு மற்றும் வாழ்முறைத் திறன் வளர்ச்சி
- வன்முறைத்தடை செயல்முறைப் படுத்துதல்
- தனிப்பட்டோர் மற்றும் குடும்ப அறிவுரைச் செயல்
- மாணவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் கூட்டுத் திட்ட செயல்முறை

## Admission Criteria
## நுழைவுத் தேர்வு அளவை

பெற்றோர் அல்லது காப்பாளர், சமூக முகவாண்மைகள், மற்றும் பாதுகாப்பான பள்ளி நிர்வாகிகள் ஆகியோரால் வாடிக்கையாளர் குறித்தனுப்பபடுகிறார்கள்.

இந்த சேவையில் நுழைவுப் பெற, வெளியேற்றப்பட்ட மாணவர் செயல்திட்ட மேற்பார்வையாளரை அணுகவும்.

## YOUTH OPPORTUNITIES STRATEGY
## YOUTH OUTREACH WORKER PROGRAM
## இளைஞர் வாய்ப்புக்கள் கையாளுமுறைத் திட்டம்
## இளைஞர் தொட்டுத்தொடர்பு சேவகர் பணித்திட்டம்

## ENGAGING YOUTH, FAMILIES AND COMMUNITIES
## இளைஞரை, குடும்பங்களை, சமூகங்களை உள்ளாக்குவது

## PROGRAM VISION
## பணித்திட்ட நோக்கம்

ஒன்டேரியோ குழந்தை மற்றும் இளைஞர் செவகம் அமைச்சகத்தில் இருந்து வரும் நிதி கொண்டு இந்த மாநிலமெங்கும் ஒரு இளைஞர் தொட்டுத்தொடர்பு முன்னியக்க செயல்பாடு தொடங்கப்பட்டுள்ளது. அது டொரோன்டோவின் 13 முந்துரிமை சுற்றுப்புறங்களில் சேவை புரியும் 35 இளைஞர் தொட்டுதொடர்புப் பணியாளர் உட்பட்டது. புறமொதுக்கப்பட்ட 12 முதல் 21 வயது வரை உள்ள இளைஞரை நேர்மறையான மாற்றுவழிகளோடு இணைக்க உள்ளூர் சமூகத்தினருடன் இணைந்து செயலாற்றி இளைஞர் வளர்ச்சி வாய்ப்புகளை உருவாக்குவதே எங்கள் குறிக்கோள். அவர்களை சிக்கல் தீர்வுசெய்யும் வழிகளை உருவாக்குவதில் ஈடுபடுத்துவதனால் அவர்களுக்குத் தேவைப்பட்ட ஏற்புணர்ச்சியும் தொடர்புணரச்சியும் எழும். அவ்வாறு, புறமொதுக்கப்பட்ட அவர்கள் சமூகத்துடன் இணைந்து வளர்ச்சியடையும் வாய்ப்பைத் தரும் இந்த மாற்றுவழி.

## YOUTH OUTREACH WORKERS
## இளைஞர் தொட்டுத்தொடர்பு சேவையாளர்

டொரோன்டோ நெடுகிலும் 13 முந்துரிமை சுற்றுப்புறங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் முக்கிய இளைஞர் நிறுவனத்தில் இளைஞர் தொட்டுத்தொடர்பு பணியாளர்கள் அமைக்கப்பட்டுள்ளனர். பள்ளி அல்லது வேறு சமூக நிறுவனங்களுடன் பயன்படும் வகையில் தொடர்பு கொள்ளாத இளைஞருக்கு இந்தப் பணியாளர்கள் வாய்ப்புவளம் தரும் தொடர்புமுனையாவார். இளைஞர் தொட்டுத்தொடர்புப் பணியாளர் அவர்களுக்கு நியமிக்கப்பட்ட சமூகங்களில் இளைஞருடன் தொடர்பு கொண்டு, அவர்களுக்குத் தேவையான சேவைகளுடன் இணைப்பார்கள். அத்துடன், அவர்கள் வேறு சமூக வாய்ப்புவளம் தரும் முகமைகளுடன் இணைந்து செயலாற்றி, குறிப்பிட்ட சுற்றுப்புறங்களில் இளைஞர் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பார்கள்.

## PROGRAM GOALS
## பணித்திட்டக் குறிக்கோள்கள்

- இளைஞரை ஈடுபடுத்தி அவர்களுடைய தேவைகள், ஆற்றல்கள் மற்றும் அக்கரைகளைக் கண்டுணர்தல் ;
- பின்வரும் முழுத் தொடர்ச்சியான தவிர்த்தல்முறை, இளநேரத் தலையீடுசெயல்முறை, மற்றும் வழிமாற்றம் செய்யும் வாய்ப்புவளங்களுடன் இளைஞரை இணைத்தல்; பணியமர்த்தம், கல்வி, உடல்நலம்/மனநலம், சமூகத்தோழமை/பொழுதுபோக்கு, மீட்புப்பெரும் நீதிமுறை, மற்றும் வேறு செவைகள், ஆகியன;
- இளைஞர் வளர்ச்சி வாய்ப்புகள் உருவாக்கவும், நுழைவுத்தடைகளைக் குறிப்பிட்டு அவற்றைக் கையாளவும், சமூக வாய்ப்புவள ஆதாரங்களுடன் செயலாற்றுதல்;
- இளைஞரையும் அவர்களது பெற்றோரையும் அவர்களுடைய சமூகத்துடன் இணைத்தல்

**RISE - Respect In Schools Everywhere**
**பள்ளிகள் எங்கிலும் மரியாதை (RISE)**

பள்ளிகள் எங்கிலும் மரியாதை (RISE) என்பது, ஸ்கார்பொரோ சமூகத்தில் குறிப்பிட்ட பள்ளிகளில் நடைபெரும் ஓர் செறிவான இளைஞர் நடத்தும் வன்முறைத் தடுப்புப் பணித்திட்டம். பின்வரும் மிகயாக ஊடுருவிப் பரவும் வகையான பள்ளி அமைப்பில் நிகழும் வன்முறைச் செயல்களின் மீது அந்தத் திட்டம் கூர்ந்த கவனம் செலுதுகின்றது;
ஒடுக்கல் வன்மை, கணினி ஒடுக்கல் வன்மை, அலைக்கழித்தல், மற்றும் ஆண்–பெண் சந்திப்பு வன்மை (bullying, cyber-bullying, harassment and dating violence). RISE ஓர் இளைஞர் ஈடுபடும் எடுத்துகாட்டு செயல் முறையில், தம் பள்ளியிலும் சமூகத்திலும் வன்முறை நிகழ்வதைப் பற்றி விசாரம் கொண்ட இளைஞர் குழுவுடன் சேர்ந்து, அவர்கள் பள்ளியில் அமைதியும் பாதுக்காப்பும் சேர்ந்த ஓர் பண்பாடு உருவாக்கும் செயல்களில் தலைமை வகிக்கச் இயக்குகிறது.

பள்ளி அமைப்பில் நிகழும் வன்முறையின் உண்மையான காரணங்களும், விளைவுகளும், தீர்க்கும் வழிகளும் சார்ந்து செயலரங்குகளைத் தம் இளம் கூட்டாளருக்கு நடத்துவதற்குத் தேவைப்பட்ட ஆதாரம், பயிற்ச்சி, மற்றும் திறன்களை RISE சார்பாளருக்குத் அளிப்பது தான் RISE எடுத்துக்காட்டு செயல்முறை.

தம் பள்ளிகளில் உள்ள இளம் மாணவருக்கும், மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நடுத்தரப் பள்ளிகளில் உள்ள மாணவருக்கும், செயலரங்குகள் தலைமை தாங்கி நடத்த, RISE பணித்திட்டம் உயர்நிலைப்பள்ளி முதுநிலையருக்கு (Reps) பயிர்ச்சி அளிக்கிறது. அந்த சார்பாளர் (Reps) தம் சொந்த வாழ்க்கை அனுபவங்களையும், EMYS பயிர்ச்சி நடைவேளைகளில் பெற்ற அறிதலையும் பயன்படுத்தி இளைஞருக்கு செயலரங்குகளை உருவாக்கி நடத்துகிறார்கள். அத்துடன், RISE பணித்திட்டம் வேறு மாணவர்களுடன் செயல்பட்டு வேறுபட்ட பள்ளி நிகழ்ச்சிகளை அமைக்கிறார்கள் – உதாரணமாக, உள்சட்டைப் போட்டிகள், சுவரொட்டி (poster) போட்டிகள், மற்றும் விளையாட்டு நிகழ்ச்சிகள்.

மேலும், RISE பணித்திட்டம், செயல்முறை சமூகம் உருவாக்க, நிர்வாகிகள், பெற்றோர், மற்றும் பள்ளிப் பணியாளர் அனைவருடனும் கலந்து செயலாற்றுகிறது. அதன்படி, பள்ளி சமூகம் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி, மாணவர்கள் பள்ளிக்கு பாதுகாப்பான உணர்ச்சியுடனும், கற்றலுக்குத் தயாராகவும் வருகிறார்கள் என்பதை உறுதிப்படுத்த செயல்படுவார்கள்.

அத்துடன், RISE ஓர் விரிவான ஆராய்ச்சி உறுப்புக் கொண்டுள்ளது – அதற்குத் தலைமை தாங்குவோர், கானடாவின் மிகச்சிறந்த வல்லுநர் – ஒடுக்கல் வன்மை, ஆண்–பெண் சந்திப்பு வன்மை, அலைக்கழித்தல், ஆகிய துறைகளில். இந்தக் குழுவினரின் சிறப்பறிவுத் திறம் பெறுவதால், RISE ஓர் சான்று–அமைப்பில் இயங்கும் செயல்முறையாக அமைந்து, மாநிலம் முழுவதும் திரும்ப செயல்படுத்தக் கூடியதாக இருக்கும்படியாக்க முனைகிறோம்.

எல்லா வகையான வன்முறையைப் போல, பள்ளி அமைப்பில் நிகழும் வன்முறை, மாணவர் மீது கல்விசார்ந்தும், சமூகம்சார்ந்தும், மனநிலைசார்ந்தும், கெடுதலான விளைவு நிகழ்த்தும் என்பது நன்கு அறிந்ததே. நீங்கள் எப்படி RISE பணித்திட்டத்தை உங்கள் பள்ளிக்கு கொண்டு வரலாம் என்று அறிய, தொடர்பு கொள்க; Janice Sellon at jsellon@emys.on.ca or by phone at 416-438-3697 ext: 244.

## Chinese Community Outreach Program
## சீனசமூகம் தொட்டுத்தொடர்புப் பணித்திட்டம்

## Program background
## பணித்திட்டம் பின்புலம்

கிழக்கு டொரோன்டோவுக்குப் புதிதாக வந்துள்ள சீனக் குடும்பத்தாரின் வளரும் தேவைகளை கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகம் அறிந்துள்ளது.

கலாசாரம்சார்ந்தும் பொருத்தமான சேவைகள் தேவை எனபதைக் குறித்து அதன் பயனாக EMYS ஒரு விரிவான, வேறுபட்ட சேவைத் தொகுப்பை அளிக்கிறது – அதில் உட்பட்டது; சமூக மேம்பாடு, மருத்துவமுறை சிகிச்சை, மற்றும் பொதுக் கல்வி. கன்டோனீஸ், மன்டாரின், ஆங்கிலம் பேசுவதுடன், இந்த வேறுபாடுற்ற சமூகத்தார் எதிர்நோக்கும் தனிவகையான இடுக்கண்களை உணர்ந்தவருமான சமூகப் பணியாளர்களால் இந்த சேவைகள்அளிக்கப்படும்.

## Who is eligible?
## யார் பெறலாம் ?

உணர்ச்சி, சமூகம், மற்றும் நடத்தை சார்ந்த இடர்நிலையிலுள்ள, கிழக்கு டொரோன்டோவில் வசிக்கும் சீன இளைஞருக்கும் குடும்பங்களுக்கும் சேவைகள் அளிக்கிறோம்.

## Our goal
## எங்கள் குறிக்கோள்

அவர்களுடைய ஆற்றல்களை வளர்த்தும், பிரச்னை தீர்வு செய்யும் திறன்களை மேம்பாடு செய்தும், சீன இளைஞர் மற்றும் அவருடைய குடும்பத்தாரின் தனிப்பட்ட மற்றும் குடும்பம் சார்ந்த கடினமான சூழ்நிலைகளை தெளிவாக்க உதவுவது எங்கள் குறிக்கோள்.

சீன சமூகத்தாரின் வேறுபடுகின்ற தேவைகளை அறிந்துணர்ந்து, ஆங்கிலம், கன்டோனீஸ், மன்டாரின் மொழிகளில் நாங்கள் அளிப்பது; தனிப்பட்ட மற்றும் குடும்ப அறிவுரைப்பாடு; ஓர் புதிய சுற்றுப்புறத்துக்கும் வேற்றுக் கலாசாரத்துக்கும் பொருந்த முயலும் புதியக் கனேடியருக்கெனக் குறிப்பாக வடிக்கப்பட்ட பரந்த மனநல சேவைகள்; மனநலக் கருத்துரை; மற்றும், பொது மனநலக் கல்வி.

## Our Approach
## எங்கள் அணுகுமுறை

கிழக்கு மெட்ரோ இளைஞர் சேவையகம் வழக்கமாக பின்வரும் கருத்துகளை எங்கள் எல்லா செயல்பாடுகளிலும் ஒருங்கிணைத்தமைத்துள்ளது;

- எங்கள் முதல்நிலை கவனக்குறி வளரிளைஞர், இளம் முதிர்ந்தோர், மற்றும் குடும்பம் தான்
- குறிப்பிட்ட தேவைகளுக்கிணங்கி, எல்லோருக்கும் EMYS தனிப்படோருக்கமைத்தப் பணித்திட்டங்களை அளிக்க முயலுகிறது

- EMYS நல்விளைவளிக்கும் நேரடியான மற்றும் மறைமுகமானசேவகளை அளிக்கிறது, தவிர்ப்பு மற்றும் பொதுக் கல்வி சேவைகள் உட்பட.
- தேவைப்பட்ட சேவையை EMYS னேரடியாக அளிக்க முடியாவிட்டால், சேவைத் திட்டமுறையில் உள்ள மற்றொரு அளிப்பாளியிடமிருந்து அதைப் பெற முயலும், அல்லது அந்த சேவையை உருவாக்க ஆதரித்து வாதாடும்.
- EMYS–இன் சிகிச்சை அணுகுமுறையின் அடிப்படை, அது மருத்துவப் பண்டுவ செயல்திட்டம் செய்வதில் தொடர்ச்சியிருப்பதை உறுதிப்படுத்தும் ஓர் நெகிழ்ந்த சேவையளிப்புப் பணித்திட்டம்